REGD 4642 M

சந்தா விபரம்
ஆண்டு ரூ 7,
„ 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 11–6–50 | இதழ் 50




## காஞ்சியில் கல்லூரி

— சிறுகதை —

# 'பக்த' பக்காத் திருடன்!

"இது என்ன ஊர் ஐயா?" என்றேன், பக்கத்திலிருந்த பிரயாணியைப் பார்த்து!

"கலியாணமா? எங்களிடம் 4000 டிசைன்களில் வேட்டிகள், 6000 டிசைன்களில் புடவைகள், இன்னும் இலட்சக்கணக்கான அங்கவஸ்திரங்கள் எல்லாம் கிடைக்கும்.

பெரிய கருப்பண்ணன் செட்டி அண்ட் கோ ஜவுளி ஹால்........."

அந்த 'அப்பாவி', மூச்சுவிடாமல் படித்துக்கொண்டிருந்தார். நான் இடைமறித்து, அவர் மூச்சடைத்துச் சாகாமல் தடுத்து, 'உயிர்ப் பிச்சை' அளித்தேன், என் இரண்டாவது சந்தேகக் கேள்வியின் மூலம்!

ஐயா, கேட்டது ஊர், நீங்கள் படிப்பது ஜவுளிக்கடை விளம்பரம் .........!" என்று கூறிக்கொண்டே இலேசாகச் சிரித்தேன்! என் சிரிப்பிலே கிண்டலும், கேலியும் குழைந்திழைந்திருந்தது, அந்த ஆசாமிக்குப் புரிந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால், அவர் முகத்திலே 'விளக்கெண்ணெய்' விலாசம் தோன்றியிருக்கவேண்டிய அவசியமே இல்லை. அவர் தனது அசட்டுத்தனத்திற்குத் திரையிட பொய்ச் சிரிப்பிடம் 'பேரம்' பேசவேண்டிய அவசியமில்லாமல், நானே பேசத் தொடங்கினேன், அவருக்குக் கொஞ்சம் மன ஆறுதல் தருவோமே என்ற நோக்கத்தோடு!

"உலகமே விளம்பர அச்சாணியிலே சுழலுது! ஊர்பேர் கூடத் தெரியாமே வியாபார விளம்பரம் பெருத்துப் போச்சு! ஊர் மக்கள் கண்களிலே மண்ணைத் தூவ இப்படி ஆட்டம் போடுது, 'பணம் பெருத்தான்' பரம்பரை! இரும்புப் பெட்டிகள் காலம் ஐயா இது! அது க போடுற வெளிச்சத்திலேதான் சர்வமும் சங்கமமாகுது! ஹூம்...என்ன செய்கிறது? விளம்பர யுகமாப் போச்சு... ஆர்ப்பாட்ட சீசன்......'அல்டாப்பு'களுக்குத்தான் காலம்! ........."

என்று மடமடவென வார்த்தைகளை வாரி இறைத்துவிட்டேன். அதற்குள் அந்த 'விளம்பரப் பலகை' நண்பர், தன் தவறைத் திருத்திக்கொண்டதை உணர்த்தவேண்டி' "ஐயா, இது திருவாரூர், நீங்க இங்கேதானே இறங்கணுமின்னீங்க" என்றார்.

"ஆம்" என்று கூறிக்கொண்டு அவசர அவசரமாக இறங்கினேன்—நான் இறங்கவில்லை, அப்படி நெருக்கியடித்து என்னைத் தள்ளிவிட்டார்கள், வெளியே!

X X X

ராஜகுமாரி பார்டர், மும்தாஸ் மகால் முந்தி, மங்கம்மா சபத ஓரம் போட்ட நவநாகரீக சேலைகள் வேண்டுமானால், எங்கள் சௌந்தர்ய மஹாலுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.

பெரிய கருப்பண்ணன் செட்டி
அண்ட் கோ.,
ஜவுளி ஹால், திருவாரூர்.

✲

'ஜெய்ஹிந்த்' வேட்டி, 'சுதந்திர பாரத்' அங்கவஸ்திரம், 'சுபாஷ் போஸ்' துண்டு, 'திலகர்' துப்பட்டா, நவநாகரீக மைனர்களே, எங்களிடம் கிடைக்கும்.

சௌந்தர்ய மஹால்,
ஜவுளி ஹால்,

உரிமையாளர்:
பெரிய கருப்பண்ணன் செட்டி.

✲

அகில உலக அலங்கார ஆடைகளையும் அடக்கிவைத்திருக்கும் அழகு மாளிகை—எது? எங்கும் பிரசித்திபெற்ற எல்லாவகை ஜவுளி தினுசுகளும் கிடைக்கும் இடம் எது? —அதுதான் பெரிய கருப்பண்ணன் செட்டியார் உலகத்தில் ஆடையில்லாக் கொடுமையை எதிர்க்க, நிர்வாணக் கொடூரத்தை ஒழிக்க அமைத்திருக்கும் சௌந்தர்ய மஹால்!

✲

ஊரினுள்ளே நுழைந்தேன். திடுக்கிட்டேன்; திணறிப்போனேன். திருவாரூரே, இந்தத் துணிக்கடைத் திருவாளரின் தெருப்பக்கத்துச் சுவரோ என்று சந்தேகித்தேன். அவர் விளம்பரம் இல்லாத சுவரெல்லாம் அழகிழந்த ஆரணங்குகள் போலவே தோன்றின!

திருவாரூர் முழுவதும் மக்களின் கூட்டம் — அன்று தியாகராசர்—அவர்தான், அந்த ஊரில் 'காம்ப்' போட்டிருக்கும் ஆண்டவன்—தேரேறி வரப்போகிறாராம்! அந்த அழகு குலுங்கிடும் கோலத்தைக் காண ஆயிரமாயிரமாக மக்கள் திரண்டிருந்தனர்.

நானும் ஆலயத்திற்குள் நுழைந்தேன்.

அங்கேயும் அவர் விளம்பரம்! ஒரு பக்கத்திலே ஒரு 'ஷோ ஹால்' ஏற்பாடு செய்திருந்தார், பெரிய கருப்பண்ணன் செட்டியார்! அந்த ஆண்டவனை மக்கள் தரிசிப்பது போல அவர் அடுக்கிவைத்திருந்த பட்டுப் பீதாம்பரங்களையும் கண்டு 'சேவித்து' வாயூர, நாவூர, சிந்தை நகரச் செல்வர் தத்தம் இல்லம் நோக்கி. குழந்தைகள் மறுநாள் பட்டுச்சட்டைக்கு படையெடுக்கத் திட்டமிடுவர்! குமரிகள், வரட்டும் 'அவர்', இன்று சிரித்தாவது அல்லது கண்ணீரைச் சிந்தியாவது மோகினிக் கலரும், மின்மினி பார்டரும் போட்டுக் கண்ணைப் பறிக்குதே அந்தப் புடவையை எப்படியும் எடுக்கச் சொல்வேன் என்று சபதம் எடுத்தபடியே நடப்பர். அத்தனைச் 'சரக்கும்' அங்கே 'அத்துபடி'. செட்டியார் வாழ்க!... என்று 'கழுகுப் பார்வை' காளையர் புகழ்வர், துணிக்கடை, 'தொந்

...ளை', 'பந்துவராளிப் பார்வை' ...வையர் தரிசனம் கிடைத்துவிட்டால்! அத்துடன் விடவில்லை. செட்டியார்—ஒருபடிமேலேசென்று விட்டார்! தேர் திருவிழாவன்று கோயிலிலே ஒரு பாட்டுக் கச்சேரி, ஒரு நாட்டியக் கச்சேரி—ஆகஇரண்டிற்குமாக ஐயாயிரத்தை ஒதுக்கினார்! பாட்டுக்கு, சினிமா புகழ் சரசஸல்லாப கோகிலகான கோலாகல இசைராணி மோகனாங்கியை ஏற்பாடு செய்தார். அதுபோலவே நாட்டியத்திற்கு, நீட்டுப் பட்டங்கள், ஏழெட்டுக்குக் குறையாது பெற்றுள்ள இரட்டைமலை இளவரசிகள் என்று பெயர் பெற்ற லீலா, சுசீலா, ஆகிய இருவரையும் வரவழைக்க முடிவு செய்தார். அவர்களுடன் மேலும் ஒரு விசித்திரமான ஒப்பந்தம்—அவர்கள் கச்சேரிக்கு முன்னதாக ஒரு வாரம் அவருடன் தங்க வேண்டும். தினம் மாலை ஐந்துமணி முதல் பத்துமணிவரை, அந்த 'ஷோ ரூமில்' இருந்து மகிழ்விக்க வேண்டும், இதைப் 'பச்சையாக'ச் சொல்லவில்லை. 'நாசூக்கான' முறையில் சொல்லி அப்படியே அவர்களை அழைத்து வந்துவிட்டார்! தியாகராசருக்கு விழாவென்று பெயர்—பெரிய கருப்பருக்குத்தான் உண்மையில் திருவிழா! கூட்டம் முழுவதும் இங்கேதானே இருக்கிறது, தினமும்! பாடும் குயிலாளையும், ஆடும் மயிலாளையும் பார்க்காமல் அசையாச் சிலையையா, மக்கள் பார்ப்பர்?

காலையிலே தேர் அசைந்து அசைந்தோடிற்று......... போலீஸ், படையின் ஆர்ப்பாட்டத்திற்கிடையே, பொங்கும்உணர்ச்சியோடு இழுத்தும் ஓடும் இளைஞரின் ஒத்துழைப்போடு, பரம்பரை பக்திப் போதையும் கைகொடுக்க...அப்படி இப்படி அதை இதை வளைத்துப் போட்டு எப்படியோ தேர் ஓடிற்று, ஓடிக்கொண்டிருந்தது!

என்ன ஆச்சர்யம்......ஓடிய தேர் பள்ளமில்லை, படுகுழியில்லை, வேறு எந்தத் தடையுமிலலை, நின்றுவிட்டது! இழுத்திழுத்துப் பார்த்தனர்; இழுக்கமுடியவில்லை. வடத்தைப் போட்டனர். மக்கள் கலைய ஆரம்பித்தனர்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் தேர் நின்றுவிட்டது என்று யாரையாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்போலிருந்தது. சுற்றிலும் பார்த்தேன். என்பார்வையில் பட்டுத் தெறித்த அந்த ஒளி மாளிகையை மறக்க முடியவில்லை. அதுதான் ஊர் சுவரையெல்லாம் அடைத்துக்கொண்டிருக்கிற விளம்பரங்கள் சொல்லும் சௌந்தர்ய மஹால். அதன் எதிரில் வந்தவுடன்தான், தேர், காரணமின்றி நின்றுவிட்டது!

ஒருவர் என் ஓரமாகப் போனார். அவரிடம் கேட்டேன்.

"ஐயா, ஏன் ரதம் மேலும் ஓடவில்லை!" என்று மெதுவாகக் கேட்டேன்.

"தெய்வ சித்தம் அப்படி—இதோ இருக்கிறதே, ஒரு ஆடைக் கடை! இது ஒரு பக்திமானுடையது. அவர் இந்த தியாகராஜருக்குச் செய்திருக்கிற திருப்பணிகள் சொல்லி முடியாது. அவர் கடையண்டை வந்ததும் தியாகேசரே நின்றுவிட்டார்!" என்றார் அந்த நவீன நாயனர்!

எனக்குக் கொஞ்சம் 'போதிமரம்' நிழலுணர்ச்சி ஏற்பட்டது. ஞானோதயம் பூரணமாகுமுன் ஒரு 'இளமீசை'யிடம் அதே கேள்வியைக்கேட்டேன், பக்திமானிடம் கேட்டதுபோலவே!

அந்த வாலிபன் என்னை உற்றுப் பார்த்தான்.

"அதுதான் பணம் செய்கிற வேலைத்திறம்............அத்தனையும் ஹம்பக்! தியாகேசர் நின்று விட்டாராம். இந்தப் புரோகிதக் கூட்டம் அந்தச்செட்டிகிட்டே துட்டுவாங்கிக்கிட்டுது! 'முட்டுக் கட்டைகள்' 'உலுக்கு மரங்கள்' எல்லாம் அந்தப் பூசை பண்ணுற கூட்டத்திற்கு அடக்கம்! எல்லாம் 'பிசுனஸ் நேக்' ஐயா,...இங்கே தேர் ஒரு வாரம் நிக்குதுன்னு தினந்தினம் கூட்டம் ...கூட்டம் கூடினால் அவங்களுக்கு விளம்பரத்திற்கு விளம்பரம், வியாபாரத்திற்கு வியாபாரம்!"

என்று சுடச்சுட ஒரு விளக்க வேட்டுப்போட்டு அவன் போக்கிலேயே போய்விட்டான். அவன் போன திசையைச் சிறிதுநேரம் உற்றுப் பார்த்தேன். அவன் கூட்டத்தில் கரைந்து மறைந்துவிட்டான்!

X X X

கூட்டத்தில் மிதந்துகொண்டு சென்றேன் — அவ்வளவு கூட்டம்! நடந்து செல்ல யார் விடுகிறார்கள்? போகிற போக்கிலேயே விழிகளைப் பெரிய பெரிய சுவரொட்டிகளில் மேயும்படி விரட்டினேன்.

பாட்டுக் கச்சேரி, நாட்டியக் கச்சேரி விளம்பரங்கள்தான் எங்கு பார்த்தாலும்! அந்த விளம்பரங்களில் நம்ம துணிக்கடை 'தொந்தி'யின் படம், பெயர், மிகப் பெரிய அளவில்! ஏன்? எனக்கும் புரியவில்லை. அந்த ஊர் மக்களுக்கும் புரியவில்லை. உங்களுக்குப் புரிகிறதோ, என்னமோ! அவர் பக்க வாத்தியம் வாசிக்கவுமில்லை. நட்டுவனர் வேலையும் தெரியாது! இருந்தும் அவர் பெயர் இருந்தது!

மாலை ஆறு மணிக்கெல்லாம் திருவாரூரே திரண்டுவந்து கோயிலை முற்றுகையிட ஆரம்பித்துவிட்டது!. 'பஸ்'கார பரமசிவ கண்டியாரிடம் ஒப்பந்தமோ, என்னமோ, ஆறு மணிக்கு என்று விளம்பரப்படுத்தப்பட்ட கச்சேரி பத்து மணிக்கென்று அறிவித்துவிட்டனர். உடனே அத்தனை மக்களும் கிடைத்த பஸ்களில் ஏறியோடினர். உண்டு திரும்பிவிட்டனர், ஒரு மணி நேரத்திற்குள்!

பாட்டுக் கச்சேரி நடந்தது. பாட்டுக் கச்சேரியைக் கேட்டவர் சிலர், பார்த்துப் பரவசமடைந்தவர் பல்லாயிரவர்! பிறகு ஆட்டம்! மக்கள் ஈ மொய்ப்பதுபோல் மொய்த்துவிட்டனர், மேடையை! ஆண், பெண் சமத்துவம் — அங்கே நூற்றுக்கு நூறு வெற்றி!

கோயிலுக்குள் ஆட்டமும், பாட்டமும்!

மணி ஒன்று அடித்தது கோயிலில்!

சிலர் திடு திடுவென ஓடிவந்தனர். அவர்கள் முகங்களில் வியர்வை மழையாய் வழிந்தது.

"ஐயோ, திருட்டு, திருட்டு, பயங்கரக் கொள்ளை!......" என்று கூவினர்!

அவ்வளவுதான். மக்கள் சிதறியோடினர்.

நான் அதன் முழு விபரத்தையும் அறிய எண்ணி அங்கங்கே 'கசமுச......' என்று பேசிய 'காதோர ரேடியோ'ப் பேச்சுகளை யெல்லாம் தொகுத்தேன். நான் கண்டுபிடித்த செய்தி இதுதான் — சௌந்தர்ய மஹாலுக்குள் திருடர்கள் புகுந்து

விட்டார்கள். ஊர் மக்களின் கவனம் முழுவதும் ஒரு இடத்தில் திரும்பியிருக்கிற இந்தச் சந்தர்ப்பத்தில் மிகச் சுலபமாக இந்த துணிகரத் திருட்டை நடத்திவிட்டார்கள். விலையுயர்ந்த ஜவுளி தினுசுகளை இரண்டு மூன்று பிரத்தியேகக் கார்களில் ஏற்றிக்கொண்டே போய்விட்டனர். ஐம்பதினாயிரம் ரொக்கமாக இருந்த இருப்பையும், அடுத்த வாரம் வருமான வரிக்காகக் கொண்டு போய்க் காட்ட இருந்த கணக்கு நோட்டுப் புத்தகங்கள் அத்தனையையும் கொளுத்திவிட்டனர். இன்னும் என்னென்ன போயிற்றென்று தெரியவில்லை!

உடனே செட்டியார் காரில் பறந்தார், கடையை நோக்கி!

*　　*　　*

எனக்கு அந்த ஊருக்குள் நுழைந்ததிலிருந்து அந்த 'ஸ்ரீமானின்' நினைப்புதான் — அப்படி அவரது விளம்பரங்கள் எனது நினைப்பை பறித்துக்கொண்டன—நான் என்ன செய்யட்டும்?

அவரது அதிகப் பிரசங்கித்தனமான விளம்பரங்கள் என்னை மிகவும் தொல்லை படுத்திவிட்டன. முன்பின் தெரியாத அந்தப் பிரமுகரை வெறுக்கச் செய்தது, ஏதோ ஒரு வருணனைக்குக் கட்டுப்படாத உணர்ச்சி! அவரை அந்தக் கச்சேரியில்தான் நேரில் பார்த்தேன். அவரது பக்திமான் வேடம் அவ்வளவு பொருந்துவதாக இல்லை. அவரது உருவம், மிருகக் காட்சி சாலையிலே இருக்குமே காண்டா மிருகம் அதைத்தான் நினைப்பூட்டிற்று! அவர்மீது பூசியிருந்த சாம்பல் 'கோட்டிங்' அங்குள்ள ஓட்டச்சிவங்கியை நினைவுபடுத்திற்று. அவரது குரலோ யுத்தகால அபாய அறிவிப்பிற்கென ஊதும் 'சைரன்'தான்! ஆகவே வெறுப்பு வளர்ந்தது, குறையவில்லை!

எனவே அவரைப்பற்றி முழுவதும் அறிய ஆசைப்பட்டேன். அதற்காகச் செய்திகளை மிகவும் கவனமாகச் சேர்த்தேன்.

கடைவீதிப் பக்கம் நடந்துகொண்டே இருந்தேன். முதலில் அகப்பட்ட அதே இளைஞனைக் கண்டேன். உடனே அவனை நிறுத்திவிட்டேன்.

"தம்பி, கொஞ்சம் நிக்கிறீங்களா?" என்றேன்.

"ஏன்" என்றான்.

"ஒரு விஷயம்!" என்றேன் மீண்டும்.

"கதையை வளர்த்தாமல்...காரியத்திற்கானதைக் கேளும்!" என்றான். அவன் கொஞ்சம் படபடப்பாகவே பேசினான்.

"தம்பி, இந்த ஊரில் பெரிய கருப்பண்ணன் செட்டியார் இருக்கிறாரே, அவர் கடையிலே திருட்டாமே!" என்றேன், 'சம்பந்தா சம்பந்தம்' இல்லாமல்!

"நீர் ஊருக்குப் புதுசா—அல்லது சி. ஐ. டி. உத்தியோகமோ! அவன் ஒரு திருட்டுப்பயல் — அவன்கிட்ட எந்தத் திருட்டுப் பயல் திருடமுடியும்? பெரியகருப்பர் மலையாள பகவதி—ஏமாந்தால் ஆளையே எடுத்து விழுங்கிவிடுவான்."

"தம்பி, என் ஆத்திரமாகப் பேசுறே, கொஞ்சம் பொறுமையாகத்தான் சொல்லேன், கேட்போம்"

"நீங்களே சொல்லுங்க, திருட வந்தவங்களுக்கு கணக்குப் புத்தகங்கள் மீது என்ன கோபம்.......அதைப் போய் கொளுத்திப்புட்டானுவ, என்று கதைக்கிறபோதே தெரியலையா, இது பித்தலாட்டமின்னு! வருமானவரி இந்த ஆசாமிக்கு இருபத்தியோராயிரத்திற்கு மேலே போட்டுப்பிட்டான். அதுக்காக கணக்குப் புத்தகங்களை 'அபேஸ்' செய்ய திட்டமிட்டே நடிக்க ஒரு நாடகம்! வருமான வரியை வாயிலே போட்டுக்க செட்டியார் போட்ட கூத்துதான் அது...... செட்டிப்பிள்ளை கெட்டி.........முன்ன ஒரு முறை பிளாக் மார்க்கட் கேசிலே, இப்படித்தான் ஆடாதஆட்டமாஆடி, போடாத வேடம் போட்டு காரியம் பலிச்சுது இப்பவும் அதே கதைதான்......"

இப்படிப்பேசிக்கொண்டேநடந்துவிட்டான், அந்தப் படபடப்புக்காரன்!

"தம்பி, எதைச் சொன்னாலும்,எவ்வளவு உண்மையை எடுத்துக் காட்டினாலும், கொஞ்சம் மரியாதையோடு சொல்லணும்—அதுதான் உன்னைப் போல இருக்கிற இளம்பிள்ளைகளுக்கு அழகு"

என்று உபதேசம் புரிந்தேன். அவன் காதுகளில் அவை விழுந்தனவோ, இல்லையோ; எனக்குத் தெரியாது — அவன்தான் போய்விட்டானே, உடனே!

ஆனால் அவன் நடந்துகொண்டே சொன்னவார்த்தைகள்மட்டும் என் காதுகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

"விளக்கமாற்றுக்குப் பட்டாலே குஞ்சம்...மகாபக்தன் என்று வேறு பேர்......பக்காத் திருடனுக்கு!"

அப்படித்தான் அவன் சொல்லிக் கொண்டே போனான்.

நானும் அந்த வார்த்தைகளை திரும்பவும் சொல்லிக்கொண்டே புகைவண்டி நிலயத்தை நோக்கி நடந்தேன்.

பக்த பக்சாத் திருடன்......என் பட்டப் பெயர்தான் அந்த துணிக் கடைத்'தொந்திக்கு' ஏற்றது என்று என் மனம் சொன்னது—என்னையறியாமல் என் தலையும் அசைந்து ஆமோதித்துவிட்டது. அந்த நேரத் தில் புகைவண்டி வருகிறது என்று மணியும் அடித்துவிட்டான்!

13-ம் பக்கத் தொடர்ச்சி

"தாழ்த்தப்பட்டோருக்"குப் பதி 'ஹரிஜனன்' வந்ததே அதுபோல சோற்றுக்குத் திண்டாடும்போது சொகுசான பெயர்கள் — இந்தி பெயர்கள் சூட்டும் ஆசை கும்ம ளம் போடுகிறது அரசாங்கத்துக்கு

## கும்மாளம் கூடாது!

இந்தியா, பாகிஸ்தான், ஆஸ் ரேலியா, இலங்கை, இந்தோனே ஷியா, சையாம், பிலிப்பைன் ஆகி ஏழுநாடுகள் சார்பில் பிலிப்பைன் நாட்டின் பகுவியோ நகரில் நடை பெற்ற மாநாடு முடிவடைந்துவிட் டது. மாநாட்டிற்கு ஜெனரல் ரோமுலு தலைமைதாங்கினர். மாநாட டின் பெயர் கம்யூனிஸ்டுச் சார்பி லாத நாடுகளின் மாநாடு என்பது ஆனால் மாநாட்டில் கம்யூனிசக் கொ குறித்து வாய்வீச்சும் வம்பளப்பு நடைபெறாதது குறிப்பிடக்கூடி ஒரு சங்கதி. தூரக்கிழக் காசிய நா களின் பொருளாதார நிலை வளர் தற்கான வழிவகைகள் காணப்பட வேண்டும் என்று யாவரும் வலி றுத்தி இருக்கின்றனர். இந் யோசனை பாராட்டற்குரியதுதான் ஆனால் நிறைவேறமுடியுமா என்பது அமெரிக்கக் கும்மாளம் அடங்கின தான் நிச்சயிக்கமுடியும்! அதுவரை இதுபோன்ற மாநாடுகள் 'ஏகாதி பத்ய வரலாறு'களின் மாடிப்படி ளாகத்தான் அமையும்! ✲

# ★ புலி நிகர் மாந்தரே! ★

"வேல் தாக்க" வேகம் தாங்காது அதோ வீழ்ந்து கிடக்கிறதே யானை, அதன் முரசத்தைத் தன் மெத்தையாகக் கொண்டு கிடக்கிறான்! நல்ல விருந்து இன்று நமக்கென்று எக்களித்து, இரு சிறகடித்து வட்டமிட்டுக் கிடக்கும் பருந்துகளின் கூட்டம், அவனுக்கு நிழற் பந்தல் அமைத்துவிட்டது! வேழத்தின் முரசம் மெத்தை—விருந்து எனப் பறக்கும் பருந்துக்கூட்டம் அவனுக்குப் பந்தல்! வேலி எதுவும் இல்லையோ அவனைச் சுற்றி என்று எண்ணுகிறாயா—பார்! எத்தனைப் பிணங்கள் அவனைச் சுற்றிக் கிடக்கின்றன, அத்தனையும் அவனது வாளும் வேலும் கொன்று குவித்த மனித மலைகள்! அவைகள், அவனது வேலிபோலக் கிடக்கின்றன! கொக்குக் கூந்தல், குரங்கு மேனி நரை மூதாட்டியே! நன்றாகப் பார்! தெரியவில்லையா? அதோ, சிறகு அடித்து சிங்காரமாகப் போய் உட்காருகின்றனவே, கழுகுக் கூட்டங்கள்—அந்த இடத்தைப் பார்! மதயானைபோல மாண்டு கிடக்கிறான் உன் மகன் — காளையெனச் சீறி, களத்திலே பாய்ந்து, செஞ்சோற்றுக் கடன் வெஞ்சமத் தாற்றிக், களிறு தலைமடுத்துப் பிணமாகிக் கிடக்கிறான், நீ பெற்ற மகன்!"

ஒரே மகன்—தன் குலக்கல் நாட்ட வந்த குல விளக்கு—அவனைப் பெற்றெடுத்த தாயோ நரை மூதாட்டி! களத்துக்குச் சென்ற தன் காளையைக் காணாத் துடித்து வருகிறாள்—உயிருடன் தப்பினானா, வீடு வந்து சேர்வானா என்ற ஆசையோடு அல்ல! புயலெனப் பாய்ந்தானா, புலியெனக் கிழித்தானா, புகழ் மரணம் அடைந்தானா அல்லது புல்லனாகிப் போனானோ! புறமுதுகிட்டானோ என்று கண்டு தெளிந்துகொள்ளும் நோக்குடன்! தேடிப் பார்க்கிறாள்! —திண்தோள் வீரர்கள் சாய்ந்து கிடக்கும் அச்சமர்க் களத்தில். திகைக்கிறாள் — தன் மகனைக் காணாது. அப்போது, ஒருவர் காட்டுகிறார், அவளது மகன் காற்றெனச் சுழன்று பகைவரைக் கொன்று பாசறையில் உயிர் துறந்தான், மார்பிலே ஈட்டி தாங்கி—என்பதாக!

வீரஞ்செறிந்த இக்கவிதை ஓவியம்—தீந்தமிழின் புறநானூறு செப்பும் ஒரு சிறு துணுக்கு.

சிந்தை அயர்ந்து, வீரம் மறந்து, வீணராகிவிட்ட வீரப்பரம்பரையின் வெற்றி ஏடு—நமது பழம் பெருமையின் பளிங்குமா மண்டபம் தரும், சிறு ஒளி!

கனியிடை ஏறிய சுளையும், காய்ச்சிய பாலிடை ஏறிய ருசியும் தரும் செந்தமிழின் சிறப்புறு காவலர்கள்—தென்னாட்டு மக்கள்—எதிரிகளைப் போரிட்டு முறியடிக்கும் சிந்துகளைப் பாடிக்கொண்டிருப்பது!

கேட்டாலே மயிர் சிலிர்க்கும்—கிழவனும் குமரனாவான், தீந்தமிழ் தரும் வீரப் பண்ணொலியைக் கேட்டால்.

வேலே கை, வீரலே வாள், வேழமே கவசம், வீரமே பேச்சு, வெற்றியே மூச்சு என்று விருது பாடி பாசறையிலே கூடி, பகைவரைச் சாடி வெற்றி பெற்றோர்; இன்றேல், விலாவிலே வில் தாக்க, வேல் பாய, வீழ்ந்து இறந்து போன மகனைக் கண்டும் மனங் குலையா மாதரசிகள்—மகன் மார்பிலே வேல் தைக்க இறந்தானா அல்லது முதுகிலே வாள் தாக்க மடிந்தானா என்று பிணக் குவியலைப் புரட்டிப் பார்த்து பெருமூச்செறியும் வீரத் தாய்மார் விளையாடிய தண்டமிழ் நாடு இது. இன்று எலியென்றால் கிலி கொண்டோடும் இழிநிலையிலிருக்கிறது! புலிநிகர் மாந்தர் நாம் என்று முரசு கொட்டி முத்தமிழ் வளர்த்த மூவேந்தரின் பரம்பரையினர் இன்று முதுகெலும்பொடிந்து, மூளைப்பலம் அற்று 'முத்தண்ணுக்க'ளாகி விட்டனர்!

வீரம் மட்டுமல்ல, விவேகமும் காதலும் தவழ்ந்து விளையாடியது, இத்தண்டமிழ்ச் சோலையில். களிறு எறிந்து, தன் காதலியைக் கைபிடிக்கும் காளைகள், மடலேறி மணவினை நடாத்திய மாவீரர்கள் வாழ்ந்தனர்! வாழ்வில் இன்பமும் வீரமும், குதித்துக் கூத்தாடியது! குறிஞ்சியும் மருதமும், முல்லையும் நெய்தலும் காதற்கிளிகளின் கவிதைத் தமிழ்ப் பேச்சால் களிப்படைந்து கிடந்தன—என்று அழகுபடக் கூறும் அகமும், அவர்தம் வீரஞ்சாற்றும் புறமும், இன்பத்தொகையெனும் எட்டுத் தொகையும், பாலின் சுவையெனும் பத்துப் பாட்டும், பற்றியிழுக்கும் பதினெண்கீழ்க்கணக்கும், சிலம்புச் செல்வமும், ஜீவகமணியும், மணிமேகலையும், குன்றாப் புகழும் குவலயச் சிறப்புமிக்கத் தமிழ் மொழி, இன்று தவித்திடும் தாயாகிவிட்டது—கணவனையும் கண்ணென நம்பிய குழந்தைகளையும் இழந்து ஏமாந்த விதவையாகி நிற்கிறது!

வீரம்செறிந்த நாட்டில் சோர்வுப் பேச்சுகள்—வெற்றி முரசம் எதிரொலித்த தாயகத்தில் வெட்டிக் கூச்சல்கள்! வீரமண்—வீண்பூமியாகி விட்டது. விவேகம் குறைந்து விட்டது. வாழ்ந்தவர்—வீழ்ந்து விட்டனர்! வெற்றிக் காதைகள், பண்டைத் தமிழரின் வெஞ்சமர்ச் செய்திகள். அள்ளும் அகம், துள்ளும் புறம் எல்லாம் மக்கள் மனத்திரையிலிருந்து மறைந்து விட்டன!

இயலும், இசையும், கூத்தும் இந்நாட்டு மொழியின் மூன்று குழந்தைகள்! இயல் இன்பந்தரும் கற்கண்டு, இசை நெஞ்சையள்ளும் கவிதைச் சுரங்கம், கூத்து எண்ணங்களை நடித்துக் காட்டி இன்பங்கொள்வது. இது மூன்றும் அடங்கிய தமிழ்—முத்தமிழ், தமிழ் மறவரின் முரசமாயிருந்தது. இன்று முரசத்தில் ஆங்காங்கு துவாரங்கள் ஏற்பட்டு விட்டன—தானாக அல்ல, வயதேறிய காரணத்தால் அல்ல. வஞ்சக நினைப்பும், சூழ்ச்சிச் செயலும், சூது மதியும் கொண்டோரின் சுயநலச் சூறு வளியால். முத்தமிழ் முரசத்திலிருந்து எழும்பும் வீரஒலி, காதல் மொழி, இன்பவழி எல்லாம் கொள்ளைபோகும் நிலையில், மாற்றான் தாய் மனப்பான்மையினர் புகுந்து விட்டனர்.

தன்னம்பிக்கை, தற்பெருமை குறித்த தருக்கு, தன் நாட்டைப்

பற்றியச் செருக்குகொண்டு வாழ்ந்த தமிழ்மரபு, இன்று தண்டு தூக்கியவனுக்கெல்லாம் தலை வணங்கும் தன்மையதாகிவிட்டது.

அல்லல் போம், வல்வினை போம், அன்னை வயிற்றிற் பிறந்த தொல்லை போம் போகாத் துயரம் போம்— நல்ல குணமதிக மாமருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும், கணபதியைக் கைதொழுதக்கால் — என்று 'ஏன் பிறந்தேன் ஈசா, என்னை இறக்கச் செய்வாய் விரைவில் பரமேசா' என்று பாடக்கூடிய வெறுப்புத் துறவு, வீரப் பரம்பரையினர் வாழ்வில் புகுந்து விட்டது. 'விதி! எல்லாம் அவன் செயல்! என்னால் என் செய இயலும்' என்ற தன்னம்பிக்கையைக் கொள்ளைகொள்ளும் நச்சரவங்கள், நஞ்சுக் கொள்கைகள், நம்மவர் இதயத்தில் இடம் பெற்றுவிட்டது—எப்படியோ என்று அல்ல இன்னொரு இனத்தின் கலாச்சாரப் படையெடுப்பும், மொழிப்போரும் தமிழைச் சிதைத்துச் சித்திரவதைக்குள்ளாகிவிட்டது. தாசியின் மோசப் பேச்சில் மயங்கி, தாயை இழந்த தன்மையனான் தமிழன்— தென்னாட்டு மகன், திராவிடவீரன்!

காலைக் கதிரின் கண்கவர் காட்சி, மாலை மதியத்தின் மண் புகழ் மாட்சி, கோல மயிலின் ஒய்யார ஆட்டம், மேகக் கூட்டத்தின் மின்னொளி, காட்டகத்தே காணப்பெறும் களவியல் செய்திகள், நாட்டகத்தே நடைபெறும் நற்போர்க் குறிப்புகள், வேந்தரின் வேழப்படை, விளையாடு மாதரின் தத்தைப் பேச்சு, தலை வணங்காத் தமிழரின் வீர மூச்சு— இலக்கியங்களாக அமைந்த காலம் போய், இறைவன் அந்தாதியும், இராமகாதையும், பக்காமிர்தமும், பாரதக் கதையும், திருவிளையாடற் புராணமும் எழும்பலாயின. கம்பரும் கிழாரும்போன்ற பக்த சிகாமணிகள் பல்லுருவில் நடமாடலாயினர்! இயற்கையைப் பாடியவன் 'இறைவா, என் அப்பா—உன் முக்தி பெற என்னம்மா செய்வேன்?' என்று அம்மையும் அப்பனும் நீயே எனப் பாடத் துவங்கினான்.

மூதின் முல்லை, வீரத் தாய்மார், நடுகல் நாட்டிய நற்குடி மக்கள், சேரன் மாட்சி, சோழ மண்டபக் காட்சி, பாண்டியன் படைப் பலம் குறித்து முழக்கப்பட்ட இசை— விசையொடிந்தது! இயற்கை வர்ணனைகள், குன்றத்தின் கோலம், நிலாவின் அழகு, அன்னத்தைத் தூதனுப்பும் காதலன் கதை குறித்து யாழொடு வீணை கலந்து இசைத்த வாணர்கள் மறைந்துபோய், மதியைச் சூறையாடும் விதியைக் குறித்து, ஏழேழ் பிறப்பைப்பற்றி 'பஜனை' செய்யும் பரமார்த்தீக சிஷ்யர்கள் கிளம்பினர்! விளைவு—இசைத்தமிழ் இன்று கோயில் கோபுரத்தைப் பற்றி, கோபாலன் கோபியருடன் குலவிய வகைகளைப்பற்றி, அனுமானின் ஆழ்வார் திருப்பெருமைபற்றி மாறிவிட்டது. மகனைத் தேடி அவன் வீர மரணமடைந்தான் என்பதைக் கேட்டு மகிழ்ந்த தாயின் மாட்சி குறித்து பாடவேண்டியவர்கள், "முருகா, முருகா, எனக்கொரு கதி தா முருகா!" என்று பாடுவதே இசை என்று எண்ணிவிட்டார்கள்!

இசையிலே—தமிழ் மணம்போய், தகாத நாற்றம் குடிகொண்டுவிட்டது.

இயற்றமிழ்—இம்மை இது பொல்லாது, இந்த வாழ்வு நில்லாது, எனவே மறுமையைத் தேடீர்— அங்கு செல்லும் மார்க்கம் காண்பீர்—என்று மாறிவிட்டது. இத்தகைய எண்ணங்களைப் பரப்பும் பாகவத புராணங்களாக புது உருவு எடுத்துவிட்டது.

கூத்து — மகிழ்ச்சிப் பெருக்கால் எண்ணத்தை நடிப்பு எனும் துடிப்புச் செய்கைகளால் காட்டப்பட்டு வந்த காலம்போய், 'ராதா கிருஷ்ண நடனம்', நளாயினி கதை, இராமாயண நாடகம் என்று மாறிவிட்டது. முத்தமிழ் — இன்று 'எத்தமிழ்?' என்று கேட்கவேண்டிய நிலைக்கு வந்துவிட்டது.

> ம-ள-ள-ஸ்ரீ மு. ராகவையங்கார் அவர்களுக்கு; தற்காலத்தில் காணபபடும் சிலா சாஸனங்களாகிய இவைகளின் ஆராய்ச்சியில் தங்களுக்கு நிரதிசயமான வன்மை உளதாகத் தெரிகிறது. ஆகையால் ஆரிய தர்மத்திற்கு மாதமொரு விஷயம் அனுப்பிக்கொண்டு வரும் கைங்கர்யத்தை ஏற்றுக்கொள்ள வேணுமென்று ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் ஆஜ்ஞையான பிரசாரம் எழுதலானது"

தமிழின் கதி, இந்த உருவுக்குத் தேய்ந்துவிட்டது—தேயும்படி செய்யப்பட்டது. இது தமிழாராய்ச்சியிலீடுபட்டிருந்த திரு. மு. ராகவையங்காருக்கு, 'காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு: ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் ஆஞ்ஞையிட்டருளிய ஸ்ரீமுகம்' இது!!!

தமிழின் தனிப்பெருமை மறையச் செய்ய 'திரை மறைவில்' திட்டமிட்டு வேலைகள் நடைபெற்றன— வந்தவர்க்கெல்லாம் வாரி ஈந்ததால் தமிழன் தன்னிலை கெட்டான். தன்னை உணரத் தவறினான் — திராவிட மொழியின் சிறப்பினை மறந்தான். தன்னையே பாம்பு விழுங்குமளவு நெடுந்துயில் கொண்டுவிட்டான்!

இயலும், இசையும், கூத்தும்— எல்லாம் அவனைவிட்டுப் போய்க்கொண்டிருந்தன. எவரும் அவைகளை கவனிக்கவில்லை. முத்தமிழ் உருமாறியது — ஊதாரிக் கொள்கைகளால் பாவபுண்ணியம் என்ற பேச்சும், பக்தி மார்க்கம் என்ற வழியும், மோட்ச நரகம் என்ற மோசப் பாதை முதலிய தந்திர சாகத்தால்!

X X X

கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே கீர்த்தியும் செல்வமும் பெற்றுத் திகழ்ந்தது —தென்னாடு. தமிழ்நாட்டின் சார்பில் அரசியல் தூதுவன் ஒருவன், ரோம் நாட்டு மாவீரன் அகஸ்டஸ் சீசருடைய ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருந்தானாம். கட்டுக்கதையல்ல; ரோம் நாட்டுச்சரித்திரம் கூறுகிறது. இந்தத் தகவலை! எகிப்தியர், பாரசீகர், பினீஷியர் எல்லாரும் தமிழகத்தின் பொருள்களைப் பெற்று வாணிபம் நடாத்தினர்! வீரமும் விவேகமும் கலக்கத் தரணியாண்ட மன்னாதி மன்னர்கள் வீழ்ந்தனர் — வீரம் சோரம் போயிற்று! சரித்திரச் சக்கரம் சமர்கண்டு குதித்த வெஞ்செயல் வீரர்களைச் சரணாகதிக்காளாக்கிற்று! எண்ணத்தைச் சூறையாடும் சூதுக் கொள்கைகள், தமிழர் தோட்டத்துக்குள் சதிராடத் துவங்கிவிட்டன.

"சர்ரம் வேதம்; உயர்நிலை உபநிஷத்; இராமாயணமும், மகாபாரதமும் இரண்டு சுவாசப்பைகள். அதன் இருதயம் மனுஸ்மிருதி. புராணங்கள் கதைகள் முதலியன அச்சரீரத்தின் எலும்புக்கூடு. ஆகமங்

கள், சாஸ்திரங்கள், மந்திரங்கள், சடங்குகள் முதலியன அந்தச் சரீரத்தின் நரம்புகள். மதங்கள் கொழுப்பு ஜாதி என்பது தோல்" என்று வை. சூரியநாராயண சாஸ்திரியார், என்னும் சரித்திராசிரியர் எழுதுகிறார் -- இங்கு 'வந்தோரின்' நிலை குறித்தும், அவர்களது வாழ்க்கை வகை குறித்தும் கூறும்பொழுது அவர் குறிப்பிடும் 'சரீரம்' தென்னாட்டுக்குள் நுழைந்தது — தேவ பாஷை பிறந்தது!

தேவர்—மனிதர், உயர்வு — தாழ்வு உருவாயிற்று! தமிழ் மகன் தாழ்ந்தான்—தமிழ்நாடு தாழ்ந்தது —தமிழன் கெட்டான்!

புதுக்கலாச்சாரம், புதுமொழி, புதுப்போதனைகள் புகுந்தன. வீரமும் வெற்றிச் சிந்தும் பாடிக்கிடந்த பரம்பரையினர், விதி என்னும் சதிக்கு ஆளாயினர். வைதிக வலை, அவர்களை கட்டிப்போட்டது. பாவ புண்ணியம் என்ற பாம்புகள் கடித்து வீழ்த்தின!

'புதிதாகப் புகுந்தவை'களை புனிதமானவை, புண்ணியத்தைத் தருபவை, தனதான்யாதி சம்பத்துக்களை இம்மையிலும், மோக்ஷ சாம்ராஜ்யத்தை மறுமையிலும் நல்குபவை என்ற எண்ணங்கள் பரவின— பரப்பப்பட்டன. பக்திப் போதை, தலைக்கேறிற்று — தாழ்வு மனப்பான்மை தமிழன் இதயத்தில் இடம் பெறலாயிற்று. இடறி வீழ்ந்தான்— இக்கட்டுக்கு ஆளானன், 'புனிதப் பெருமை' கொண்டவையெனக் கூறப்பட்டவைகளைப் போற்றத் தலைப்பட்டான்! தானும் புனித வழியில் நடந்து, புண்ணிய புருடனாகும் ஆசை கொண்டான். வாழ்வு வீழ்ந்தது— முடிகள் சாய்ந்தன! நாகரீகமும் தமிழ்ப் பண்பாடும் சிதறிச் சிதைந்தன! விழியில் கண்ணீர் தேக்கக் கூடிய கதியற்ற நிலைக்கு மொழி, சீரழிந்தது!

மார்க்க போதகர்கள், மதாச்சாரியர்கள், சைவப் பெரியார்கள், வைணவ ஆழ்வார்கள், புத்த போதகர்கள், ஜைன மதக் காவலர்கள்— தமிழ்நாட்டில் உலவத் தொடங்கினர். தழைக்கவேண்டிய தமிழ்— மக்களின் மனதை மகேஸ்வரன்பால் மாற்றும் திருப்பணிக்குத் திருப்பி விடப்பட்டது. ஒருவாசகத்துக்கும் உருகாதாரை உருகவைக்கும் திருவாசகமும், திருப்பாவையும், இராமகாதையும், இதுபோன்றவைகளும் மதப்போட்டிகளால் நிரம்பின. தமிழ்மொழியில் தழைத்தன. ஆனால், யாவும் வீரனை கோழையாக்கிற்றே ஒழிய, வெஞ்சமர் காளையாக்கவில்லை!

பக்திப்போதையைத்தரும்இசையாவும், மூட நம்பிக்கையைப் பரப்பும் இயலாகவும், வைதீக வியாக்கியானம் தரும் கூத்தாகவும், 'முத்தமிழ்' சிதைந்தது—சின்னபின்னமாகியது. தமிழ்ச் சோலையில், தகாக்கருத்துகளெனும் தருக்கள் முளைத்தன, மரமாக வளர்ந்தன!

இந்நிலை வெகுவேகமாக வளர, வளங்கெட்டுப்போன மூவேந்தரின் வீழ்ச்சியும் காரணமாயிற்று அந்நியப் படையெடுப்புகள், வெளிநாட்டான் பிரவேசம், இன்னும் தீமைகளைத் திரட்டிவந்தது.

நெடுஞ்செழியனும், கரிக்கண்ணனும், கடும்பெருங்கோவும், செங்குட்டுவனும், இளநாகனும், காவற்பெண்டும், வெள்ளைப்பாடினியும் உலவிய தென்னாட்டில், ஆறுமுகனும், சுப்பிரமணியனும், கோவிந்தனும், நாராயணசாமியும், ரங்கநாதனும், ஜகதாம்பாளும், நீலாயதாக்ஷியும் உலவலாயினர்! மக்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள் மாறின.

அந்த அளவுக்குத் தாய்மொழியின் நிலை கெட்டது. நெஞ்சு துடிக்கும் வகைக்காளானது!

* * *

ஒவ்வொரு நாடுகளிலும் ஒவ்வொரு காலத்தில் மறுமலர்ச்சி பூத்திருக்கிறது. பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன, மொழியிலும், வாழ்க்கை வழியிலும், சம்பிரதாயங்களிலும், பழக்க வழக்கங்களிலும். பழைமை என்ற மலர் வீழ, புதுமையென்ற அரும்புகள் இதழ் விரித்தன! காலத் தூதுவன், தனது நற்செய்திகளை ஆங்காங்கு தூவினன். பகுத்தறிவு பரவியது—ஏன்? எப்படி? எதற்காக?—என்ற கேள்விக் குறிகள் கிளம்பின. அந்தக் கேள்விக் குறிகள், அந்தந்த நாட்டின் மக்கள் வாழ்வில் மகத்தான மாறுதல்களை உண்டாக்கின. விஞ்ஞானம் விளையாட, அஞ்ஞானம் விலக, ஆராய்ச்சி பெருக ஒரு புது நிலை உதயமாயிற்று.

இத்தகைய புது வாழ்வுக் காட்சி தான் இன்று தென்னாட்டில் நிலவுவது. திசை கெட்டுப் போனோம், தேன் மொழி சிதைந்து சீரழியக் கண்டோம், மாடமாளிகைகளிருந்த இடங்களிலே மண்மேடுகள்! கூட கோபுரங்கள் கோட்டான்கள் உலவும் இடமாகிவிட்டன! வாழ்ந்த பரம்பரையின் வீரத்தையும் பெருமையையும் சாற்ற, அதோ, இடிந்து போன கோட்டை கொத்தளங்கள் —மடிந்த மாட்சியின் காட்சிகளாக நிற்கின்றன! என்று நினைத்தான்— இன்றுள்ள நிலையைக் குறித்து எண்ணினன் — சோகம் பறந்தது, வீரம் பிறந்தது.

முடிவு —இன்று தென்னாடு மறுமலர்ச்சிச் சோலையாக மாறி வருகிறது.

தமிழ் எங்கள் தாய்! தமிழ் எங்கள் பேச்சு! என்ற சங்கொலி முழங்கிக்கொண்டே இருக்கிறது. தாய் மொழி என்றதும் இதயத்திலே ஒரு குளுகுளுப்பு. தேயும் நிலையிலிருந்து தாய் மொழியைக் காக்க வேண்டும் என்ற வீராவேசம், வேலி

(11-ம் பக்கம் பார்க்க)

---

(15-ம் பக்கத்தொடர்ச்சி)

யல் முதலிய செல்வாக்குடையோர் தாய்மொழியின் பயிற்சியின் மதிப்பைக் குறைப்பதற்கேற்ற சூழ்ச்சி செய்து வெற்றிபெற்று வருகிறார்கள். ஆங்கிலம் முதலிய அன்னிய மொழிப் பயிற்சியுடையோர்க்கு உயர்ந்த சம்பளமும் தாய்மொழிப் பயிற்சி யுடையவர்க்குக் குறைந்த சம்பளமும் கொடுப்பதென்ற திட்டமிட்டுள்ளார்கள். ஆங்கில அரசியல் இந்த நாட்டில உண்டானவுடனே இந்தத் தீய சூழ்ச்சி செய்யப்பட்டது. இதன் பயனாக தமிழ் நாட்டிலே தமிழ்க்கல்வி வீழ்ந்தே போயிற்று. தமிழில் பேசுவோரும் எழுதுவோரும் மிகமிகக் குறைந்து போயினர். இந்த அனுபவத்தைக் கொண்டு இப்போதும் தமிழ்நாட்டுத் தமிழ்ப்பயிற்சியின் மதிப்பைக் குறைத்து வருகிறார்கள். இந்தத் தீய எண்ணத்தில் மண் அள்ளிப் போடுவது செந்தமிழ் வளர்க்கும் பெருமக்களின் சிறப்புடைய கடமையாகும்.

*

திராவிட நாடு

ஞாயிறு] 11—6—50 [காஞ்சி

# நீரோ—நேரு!

*

"என் கண்ணல்ல, கேளேன்!"

கோபத்துடன் உட்கார்ந்திருக்கிறாள் கோமளவல்லி—வைர அட்டிகையை 'வந்துபோகும்' அவர் வாங்கித் தரவில்லையென்பது அவளது கோபத்துக்குக் காரணம்.

வந்து போபவருக்குக் கொஞ்சம் வாட்டமான வேளை — வருமானம் சரியில்லாத நேரம். வரவுக்குமேல் செலவு வாரிக்கொண்டிருப்பதால், வனிதையின் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை. அவளோ, கோபத்தால் திரும்பாமலிருக்கிறாள். 'வந்துபோபவருக்கு' வருத்தம் தாங்க முடியவில்லை — சமாதானப்படுத்த எண்ணுகிறார்.

'என் கண்ணல்ல கேளேன்!' என்று தனக்கேற்பட்டிருக்கும் கஷ்ட நஷ்டங்களைச் சொல்ல வாயெடுக்கிறார். வனிதையின் வருத்தம் பின்னும் அதிகமாகிறது.

"உங்களுக்கென்ன, ஓய்யாரமாக காரில் வருகிறீர்கள் — ஆசையாகப் பேசுகிறீர்கள். விடிந்ததும் புறப்பட்டுப் போய்விடுகிறீர்கள். விடியா மூஞ்சிகள் எல்லாம் என்னென்ன பேசித் திரிகிறது என்பது எங்கே தெரியமுடியும்?" சோகத்தால் துவண்டபடி முகத்தை வந்தவர் மார்பில் சாய்த்து அழுகிறாள்.

மனந்துடிக்கிறது அவருக்கு 'மனமோகினி தேம்புவது கண்டு—தேற்றுகிறார். 'யார் என்ன சொன்னார்கள். சொல்! வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று கிளம்புகிறார்.

"யார் என்ன சொன்னா எனக்கென்னங்க—எனக்கு வேண்டியது நீங்க, உங்க அன்பு! நீங்க இங்கே வந்துபோறதே எனக்குப் போதும். இதுதெரியாதஇந்தத்தெருக்கழுதைகள்—எகத்தாளமா பேசறது! என்னடி, பெரிய மிராசுதாரர் வந்துபோறாருன்னுதான் பேரு — என்ன சுகத்தைக் கண்டே, சின்ன சங்கதி, சிறுசா ஒரு வைர அட்டிகை உண்டா? என்ற வக்கணை பேசறதுகள்........"

வந்தவருக்குக் கோபமும் ஆத்திரமும் குதித்துக் கிளம்புகிறது. வருமானமில்லையே என்ற வாட்ட நிலை பறக்கிறது — ஜம்பம் பிறக்கிறது! 'கோமளா! இதுக்குத்தானா இப்படி அழறே — கழுதைகளுக்கென்ன தெரியும் என் சங்கதி! ஏதோ கொஞ்சம், முன்போல பணம் கிடைக்கத்தான் இல்லே! அதனாலே என்ன— கடுகுகுறைஞ்சா காரமாபோய்விடும்? என்ன வேணும், வைர அட்டிகை தானே?"

வீட்டிற்குப் போகிறார், வேகத்துடன். என்ன செய்வதென்று புரியவில்லை! இருந்ததையெல்லாம் கொடுத்துவிட்டு ஓதியமரம் போல் வந்து நிற்கிறாள் மனைவி—தனது தாலிச் சங்கிலியும் அதோடு கூடத் தொங்கும் 'சில்லரை நகைகளுடனும்'. 'கனவான்' கண்ணில் அவை, தென்படுகிறது. குடும்பத்தின் கஷ்டமும் குழந்தைகளும் மனைவியும் படும்பாடும் கவனத்தை விட்டுச் செல்கிறது — கோமளம் கூறிய மொழிகள் கூத்தாடுகின்றன! முடிவு என்னவாகும்? — மோக வெறியர்களின் கதை யாவரும் அறிந்தது தானே!

ஜம்பம்!—மிராசுதாரனின் குடும்பத்தில், குமுறலையும், கொந்தளிப்பையும் அழுகுரலையும் 'ஐயோ!' என்ற அலறலையும் சிருஷ்டிக்கிறது. காரியத்தைச் சாதிக்க மிராசுதாரரைக் கிண்டிவிட்ட கோமளம் 'வைர அட்டிகை'யுடன் 'வந்து போபவர்' முன்னால் அலங்கரித்து நிற்பாள்.

X X X

இதே, கதையை—இன்றைய ஆளவந்தாரின் போக்கு குறித்து பன்முறை, பல மாதிரிகளில் தெரிவித்து வந்திருக்கிறோம்.

கட்டிய மனைவி போல, நாடு இருக்கிறது—காமவெறிக்கு ஆட்பட்டவன்போல நடந்துகொள்கின்றனர் நாடாளவந்தவர் என்பதாக.

இக்கூற்றை நாம் எத்தனை தடவை சொல்லியபோதிலும் இங்குள்ள நமது சகோதரர்களில் பலருக்கு எரிச்சலாகவே யிருந்தது. எத்தனை ஆதாரங்கள், புள்ளி விவரங்கள் காட்டினும்-நம்மீது கோபப்பார்வை காட்ட முற்பட்டனரே யன்றி 'கூறுவதில் நியாயமிருக்கிறதா? கொஞ்சம் யோசிப்போமா!' என்று எண்ணவில்லை. இப்போது, நாம் இதுவரை என்னென்ன குற்றச்சாட்டுகளைக் கூறினோமோ அதே முறையில் கூறுகிறார், ஒருவர்.

"இந்தியப் பிரதமர் பண்டித நேருவின் கட்டுப்பாட்டில், அவரது நேரிய பார்வையிலிருக்கும் மந்திரி சபைக் காரியாலயங்கள், இஷ்டம்போல செலவு செய்கின்றன—நிரந்தர நிதிக் கமிட்டியை மதிப்பதில்லை.

என்னால் இத்தொல்லைகளைச் சமாளிக்க முடியவில்லை வீண் செலவைக் குறைக்கவேண்டும் என்று நானெடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் நிறைவேறவில்லை. என் ஆசை வீணாயிற்று! குறிப்பாக பிரதமரின் வெளிநாட்டிலாகாவுக்கென செலவழியும் பணத்தைத் தவிர்க்க முடியவில்லை!

இத்தகவலை வெளியிட்டிருப்பவர் ஒரு 'ஏனோதானோ'வல்ல, ஏதாவது பேசவேண்டும் என்ற எண்ணத்தில் இதை வெளியிடுபவருமல்ல. நேற்று வரை இந்திய சர்க்காரில் பொறுப்பான நிதிமந்திரி பதவி வகித்து ராஜினாமா செய்துவிட்ட ஜான் மத்தாய், பண்டித நேருவுக்குப் பதிலளிக்கும் வகையில் இக்குற்றச்சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார்—தக்க காரணங்களோடு.

"பணமில்லை!—பணம் வரும் வழியில்லை, எனவே வாடுகிறோம்" என்று இந்திய சர்க்காரைச் சேர்ந்தோர் எதற்கெடுத்தாலும் பஞ்சநாதம் கிளப்புகின்றனர். அப்படி எழும்பும் போதெல்லாம், நாம் "பணமில்லாமலில்லை—ஆனால் அது வீணாகச் செலவழிக்கப்படுகிறது. வீண் கவுரவம், போலி ஜம்பம், ஆகியவைகளுக்காக மக்களின் வரிப்பணம் வீணாகிறது. வெளிநாட்டில் அரசியல் தூதர்களுக்கென்றும், வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணங்களுக்கென்றும் விரயமாகிறது" என்று எடுத்துக் காட்டி வந்துள்ளோம். இப்போது, நாம் கூறும் அதே குற்றச்சாட்டை

டாக்டர், மத்தாய் வெளியிடுகிறார், வேதனையோடு—தாம் ஒரு 'மாஜி' யான பிறகு! அவரது விளக்கத்துக்கு, தனது பதவிக் காலத்திலேற்பட்ட கடைசிச் சம்பவத்தையும் கூறுகிறார்:—

இங்கிலாந்தில் இந்தியாவின் சார்பில் ஹைகமிஷனராக இருக்கும் வி. கே. மேனனை அயர்லாந்துக்கும் அரசியல் தூதராக நியமித்தனர். ஒருவருக்கு இரண்டு பதவிகள்! அவ்விதம் நியமனம் செய்யவேண்டுமென வெளிநாட்டிலாகா தன் விருப்பத்தைத் தெரிவித்தபோது நிதிமந்திரி சபையின் நிரந்தரக் கமிட்டி, அவர் ஸ்தானீகராக நியமனம் செய்யப்பட்டால் பிரயாணச்செலவு தவிர வேறு எதையும், இப்போதுள்ள நிலைமையில் ஏற்பதற்கில்லையென்று தெரிவித்தது. இதை நேருவின் இலாகாவும் மந்திரி சபையும் ஒத்துக்கொண்டது ஆனால் வி. கே. மேனன் இதை ஏற்கவில்லை! அயர்லாந்தில் ஒரு தனிக் காரியாலயக் கட்டிடமும் அங்கு தன்கீழ்ப்பணியாற்றச் சிப்பந்திகளும் இருக்க வேண்டுமென அவர் வலியுறுத்தினார். எனவே மீண்டும் நேரு ஆலோசனை செய்தார் தனது மந்திரி சபையுடன் இப்போது வி. கே. மேனனின் ஆசை நிறைவேற்றப்பட்டிருக்கிறது (வி. கே. மேனன், பண்டித நேருவின் பழைய நண்பர் என்பதையும் வெளிநாட்டு அரசியல் தூதர்களிலேயே விசயலட்சுமி பண்டிட்டுக்கு அடுத்தபடி வெகுவசதிகளுடன் இருப்பவர் என்பதையும் நண்பர்கட்கு நினைவூட்டுகிறோம்) வி. கே. மேனனின் கோரிக்கையை மந்திரி சபை அங்கீகரித்தது. ஆனால் நிரந்த நிதி கமிட்டியின் அங்கீகாரம் பெறவில்லை—அதோடு நிதிக் கமிட்டியின் முந்திய யோசனையும் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

திடீரென ஏற்படும் செலவுகளுக்கும், பட்ஜெட்டில் ஒதுக்கப்படாத இனங்களுக்குப் பணம் தேவைப்படுகிறது என்று மந்திரி சபைகள் கோரினாலும் அவைகளைப் பரிசீலனை செய்து நிதி ஒதுக்கும் பொறுப்புக் கொண்டதுதான் — நிரந்தர நிதிக் கமிட்டி!

ஆனால் இக்கமிட்டியை நேருவின் இலாகாவே மதிக்கவில்லையென்பது தான் மத்தாய் தரும் குற்றச்சாட்டு.

ஒவ்வொரு மந்திரியும் இஷ்டம்போல் செலவுசெய்வது கூடாது—என்பதைத் தடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு நிறுவப்பட்டதுதான் இந்நிதிக்கமிட்டி. ஆனால், ஆட்சியை ஏற்று நடத்திச் செல்லும் பிரதமரே அதைநிராகரித்திருக்கிறார்.

* X *

காங்கிரஸ் ஆட்சியினர், பதவியிலமர்ந்தது முதல் இதுவரை வெளிநாட்டுத் தூதுவர்களுக்கென்றும், வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணங்களுக்கென்றும், அமெரிக்காவிலிருந்து ஜப்பான் செல்ல படிச்செலவு என்றும் ஆகிவந்திருக்கும் செலவுகள் அபரிமிதமாகும். இவ்வளவு பணம் செலவழிந்து கொண்டிருந்தும் இதனால் நன்மை உண்டா என்று பார்த்தால — 'வைர அட்டிகை' வாங்கித் தந்து தாசி நேசத்தைப் பெறவும், தாசித் தெருவைச் சேர்ந்தோர் தனது பணப்பிரதாபம் குறித்துப் புகழவும் விரும்பினானே ஒரு வீணன், அவன் கதைதான் நினைவுக்கு வரும்.

சுதந்திரம் பெற்றதும், இந்தியா ஒரு பெரிய நாடு என்று காண்பித்துக் கொள்ளும் 'ஜம்ப' வழியில் இறங்கி விட்டார் இந்தியப் பிரதமர் நேருவும். இதன் விளைவாக ஏழையின் பணம் வீணாகி வருகிறது — வெளிநாட்டுத் தூதுவர்களின் செலவு, பாதுகாப்புப் படை, வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணம் என்ற வழிகளில்!

'ஜம்பம்'-இவர்களை இத்தகைய வழிகளில் பணத்தை விரையமாக்கச் செய்து வருகிறது. அடிக்கடி பேசும் போது மட்டும் நேரு முதலானோர் சிக்கனம் கையாளப்படவேண்டிய அவசியம் குறித்து, சிங்காரமாகப் பேசுகிறார்கள்! ஆனால், கதையோ 'ஒய்யாரக்கொண்டையாம் உள்ளேயிருக்குமாம் ஈரும் பேனும், என்பது போல இருக்கிறது.

நேரு-சாமான்யரல்ல! ஓரளவு நாட்டிற்காகப் பாடுபட வேண்டுமென்கிற நன்னோக்கு உடையவர் என்று போற்றப்படுபவர். அவரே, இந்த நாட்டின் ஆட்சியை நடத்திச் செல்லும் முக்கிய பொறுப்பிலிருக்கிறார். அவர், நடவடிக்கைகள் இத்தகையதாகயிருக்கிறது என மத்தாய் வெளியிடுகிறார்.

அரசியல் தூதுவர்களின் பெயராலும், பாதுகாப்புப் படாடோபங்களினாலும் ஏராளமான பணம் இந்திய சர்க்காரின் பொக்கிஷத்திலிருந்து போய்க்கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் மாகாணசர்க்கார்களோ நாட்டு வளர்ச்சிக்கான புதுப் புதுத் திட்டங்களைத் தீட்டி வைத்துக்கொண்டு திண்டாடுகின்றனர்—பணமில்லாமல். மத்திய சர்க்காரோ—பணம் கேட்டால் மிரட்டுகிறது! எனவே, வேதனையோடு வெளியே சொல்லமுடியாமல் திண்டாடுகின்றனர்.

வீண் அந்தஸ்து, போலி ஜம்பம் இவைகளின் பெயரால் வரிப்பணம் வீணாகிறது! அது குறித்துக் கவனமோ, கவலையோ காட்டாத திருவாளர்கள் திடீரெனப் பணக்கஷ்டம் ஏற்பட்டால், எங்கே சுரண்டுவது அல்லது யாரைக் கடன் கேட்பது, அதுவும் முடியவில்லையா, எந்த இலாகா ஏமாந்திருக்கிறது — அங்குள்ள ஆட்களில் பலரைக் குறைத்து விடுவோம் என்று, இரை எங்கே அகப்படும் என்று அலையுமாமே காய்ந்துபோன பூனைகள், அதைப் போல அலைய ஆரம்பித்துவிடுகின்றனர். அதன் விளைவாக ஏழைக் குமாஸ்தாக்கள், எண்பதுக்கும், நூறுக்கும், திண்டாடிக்கிடப்பவர்கள் வாழ்வில் புயலைச்சிருஷ்டிசெய்து விடுகிறார்கள்.

அண்மையில் இந்திய சர்க்கார், தங்களது சப்ளை மந்திரி சபை இலாகாவில் பணியாற்றும் 123 குமாஸ்தாக்களுக்குச் 'சீட்டு' கிழித்துவிட்டது — ஆட்குறைப்பு என்று காரணஞ் சொல்லி!

வாழ்க்கையில் மண்ணை வீசும் இந்த உத்தரவை எதிர்த்துமேற்படி இலாகாவைச் சேர்ந்த ஆயிரம் சிப்பந்திகள் பேனா தொடாத வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர்

எட்டுப் பேர் 'எங்களுக்கென்ன வழி?' என்று கோரி பட்டினிகிடந்து வருகின்றனர்.

கேட்டாலே நெஞ்சு நோகும் கேவலமான செய்திகள்! "ரோம் தீப்பற்றி எரியும்போது-நீரோ மன்னன் உல்லாசமாக வீணை மீட்டிக்

கொண்டிருக்கிறார்! அதைப்போலவே இருக்கிறது நேரு சர்க்காரின் கதையும் போக்கும்—'வயிறு கொதிக்கிறது வழி இல்லை. மகானுபாவர்களே! என்று மக்கள் துடிக்கும் போது 'கர்ஜனை' செய்து 'கனதன வான்கள்' ஆகிய ஜோதியாக உலவுகிறார் அவர்—உலகெங்கும் தனது நண்பர்களையும் வேண்டியவர்களையும் தூதர்களாக அனுப்பிவிட்டு! வேதனை கலந்த இந்த விசித்திர நிகழ்ச்சிகளை மக்கள் எதிர்பார்த்ததில்லை "இவர்கள்!" ஆட்சியில்! எனினும் நேரு — நீரோ வாகிக் கொண்டுதானிருக்கிறார்!

✻

புலிநிகர் மாந்தரே!

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்ப்பும் எழும்பிக்கொண்டிருக்கிறது—ஆளவந்தார் உருவில்!

புது நூல்களுக்குத் தடை!
புதுக் காவியங்களுக்குத் தடை!
புது எண்ணங்கள் பரவத்தடை!
புது நாடகங்களுக்குத் தடை!

புதுமைக்குத் திரையிடும் பொல்லாங்குப் பாதையில், இன்றைய ஆளவந்தார் துணிந்து நடந்து வருகின்றனர். பொறாமையும், சூழ்ச்சியும் 'வளருந்தமிழ்' கண்டு மாற்றார் மனதில் எழுப்பிவிட்ட மனக்காய்ச்சலின் விளைவுகள் இவை. இந்த அடக்குமுறை ஈட்டிகளை ஆளவந்தவரான தென்னாட்டு மக்களின் பரம்பரையில் வந்தவர்கள்தான் வீசுகிறார்கள்—எனினும் இந்த வீச்சுக்குக் காரணமாயிருப்பவர் வேறு! அவர்கள் நமது கலாச்சாரத்தையும், சுதந்திர வாழ்வையும் பறிக்கத் திட்டமிட்டு வேலைசெய்து வருகின்றனர்.

நம்மை அடிமை வாழ்வில் மீண்டும் அழுத்தத் திட்டமிடுவோர், மறைந்து நின்று மாவீரன் வாலியைக் கொன்ற இராமனைப் போன்றவர்கள்.

இராமனுக்கு மறைந்து நின்று அம்பு வீச, மரம் ஒன்று கிடைத்ததே, அதேபோலவே இன்று ஆதிபத்ய வெறியர்களுக்கு ஆட்சிப்பீடமேறிய நம்மனோர் கிடைத்திருக்கின்றனர். எனவே மதி—மாற்றானுக்கு அடிமைப்பட்டிருக்கும் காரணத்தால் மறுமலர்ச்சி யுகத்தை, மண்ணுக்கடியில் புதைத்துவிட அடக்குமுறை அம்புகளை வீசத் துவங்கியிருக்கின்றனர்.

உயிர் பெரிதல்ல; சாவு எங்களுக்கோர் விளையாட்டு என்று வெற்றிக் குரலெழுப்பும் வீரப் பரம்பரை நாம்! புலிநிகர் மாந்தர் நாம்; எலிகளல்ல, ஏமாறுவோருமல்ல!

எனவே, தாய் மொழியாம் தமிழுக்கு வந்துவிட்ட—வந்துகொண்டிருக்கும் ஆபத்தை உணருங்கள்! மறுமலர்ச்சியின் உச்சிக்கு முத்தமிழ் கொண்டு வரப்பட வேண்டும் என்று எண்ணுங்கள்! தமிழைக் காப்பது நமது தலையாய கடன் என்பது நமது வீரமுழக்கமாகட்டும்!

வளரும் தமிழை, மாற்றாரின் சூதுத் திட்டத்திலிருந்து ஆளவந்தாரின் அம்பு வீச்சிலிருந்து காக்க அணிவகுங்கள். தமிழ்ப் படையின் பாசறையாக 'முத்தமிழ்ப் பெருமன்றம்' விளங்கும்! ஆகவே வாரீர், ஒன்று சேரீர் என்று படித்தோரையும் பாமரரையும் பண்டிதரையும், தமிழ்க் காவலர்களையும், இசைவாணர்களையும், எழுத்தாளர்களையும் அழைக்கிறோம்!

✻

# காஞ்சியில் கல்லூரி

—❀—

காஞ்சியில் கல்லூரி ஒன்று நிறுவ வேண்டுமெனப் பல நாட்களாகக் கண்டுவந்தகனவு நினைவாகிவிட்டது. கடந்த மாதம் 28ந் தேதியன்று செங்கற்பட்டு திருவாளர் எம். வேதாசலம் — மேற்படி கல்லூரிக்கெனத் திருக்கச்சிநம்பித் தெருவில் அமர்த்தப்பட்டிருக்கும் தற்காலிகக் கட்டிடத்தைத் திறந்துவைத்தார். அக்கட்டிடம்தான், இவ்வாரம் நமது இதழின் முகப்பை அலங்கரிக்கிறது. மேற்படி விழாவுக்கு பச்சையப்பன் டிரஸ்ட் போர்டைச் சேர்ந்த டாக்டர். டி. சடகோபன் திருவாளர்கள் வெங்கடசாமி, நடராசன், முத்துசாமி, சத்திரசாலா, கல்லூரித் தலைவர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், மற்றும் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமியும், காஞ்சியில் கல்லூரி நிறுவ அரும்பாடுபட்டு முயற்சி கனியும் நேரத்தில் இயற்கை எய்திய கந்தசாமி அவர்களது மனைவியார் நாகராஜம்மாளும், உள்ளூர்ப் பிரமுகர்களான திருவாளர்கள் பாலகிருஷ்ணனார், கா. வெ. கண்ணுசாமி, வ. கி. ர. கோவிந்தராசு, நடேசர், சதாசிவம், வெங்கடசுப்பு, எம். நடேசர், சொக்கலிங்கம், காஞ்சிபச்சையப்பன்பள்ளித் தலைமையாசிரியர் கன்னியப்பர், வித்துவான் மே. வீ. வேணுகோபாலர், மதுரா-முருகேசம், காளப்பர், கண்ணப்பர், பச்சையப்பர், செங்கல்வராயர், ஆறுமுகம், சாம்பசிவம், பாஷியம், சொக்கலிங்கம், கண்ணப்பர், சினிவாசலு, நடராசர், கலியாணசுந்தரம், வீரராகவர், சின்னசாமி, ஆகியோரும் மற்றும் பலரும் வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தனர்.

✻

## பையன் குறும்பு!

"சார், இதைப் பார்த்தீர்களா?" என்று சொல்லிக்கொண்டே வந்தான் ஆபீஸ் பையன் 5-ந்தேதி 'தினமணி' இதழை எடுத்துக்கொண்டு. 'எதைக் கேட்கிறாய்?' என்றேன். 'சிதம்பரத்தில காமராஜர் வெளுத்து வாங்கியிருக்கிறார்சார்—பணக்காரர்களை அவர் இனிக் காங்கிரசில் சேரவிடமாட்டாராம். ஆனால் ஒரு சேதி தெரியுமோ உங்களுக்கு' என்றான். 'ஏதாவது இருந்தால் விரைவில் சொல்லு — முன்னுரையொன்றும் வேண்டாம்' என்றேன். 'கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சிதம்பரத்தில் ஒரு பிரமுகர் சார்—நகரசபைத் தலைவர் என்று கூடக் கேள்வி. அதோடு பணக்காரருங்கூடவாம். அவரை, இவர்களே, வலை போட்டுப் பிடிச்சார்களாம்!' என்றான் என்று கூறிக்கொண்டே அவர் பிரசங்கத்தில் கோடிட்டுக் கொண்டு வந்திருந்த சில பகுதிகளைக் காட்டினான். என்னால் தாங்கமுடியவில்லை—அவ்வளவு சிரிப்பு வந்துவிட்டது. அவன் காட்டியது இதுதான்:—

"ஸ்தாபனத்தைப் பரிசுத்தம் செய்யப் போவதாகக் கூறி உள்புக முயற்சிப்போர்களுக்கு இடமளிக்க மாட்டேன்"

செய்தி 'தினமணி'யிலிருப்பது. காங்கிரசைப் பரிசுத்தம் செய்வோருக்கு இடமளிக்க மாட்டாராம், காமராஜர்!!

✻

### புலி நிகர் மாந்தரே!

7-ம் பக்கத் தொடர்ச்சி

போட்டு வீணர்களின் தந்திரங்களைத் தரைமட்டமாக்க வேண்டும் என்ற வெறி—இன்று தென்னாட்டுச் சமுதாயத்தில் குடி புகுந்துவிட்டது.

தாய் மொழி காக்க 'அறப்போர்' நடத்துவோம், அதற்காக உயிரிழப்போம், என்ற உறுதியை 'இந்தி எதிர்ப்பும்', தாலமுத்து — நடராசன் கல்லறையும், மாற்றாருக்கு மார் தட்டிச் சொல்லும் வீர நிகழ்ச்சியாக உருவெடுத்தது. தமிழ்க் காளைகள், இன்று உலைக் கூடத்திலிருந்து உருக்கி வார்த்த ஈட்டி முனைகளாக மாறிவிட்டனர்.

பழம்பெருமை பாடிக் கிடந்த புலவர் பெருமக்கள், நாவலர்கள் இன்று புதுமைப் பாதையில் புன்சிரிப்போடு கை கோர்த்து நடக்கத் துவங்கிவிட்டனர்.

இடலிலே—ஒரு புது மலர்ச்சி!
இசையிலே—ஒரு புது எழுச்சி!
கூத்திலே—ஒரு புதுக் கிளர்ச்சி!

எழுப்பிவிட்டது. 'அம்மாமி' நடை பழகிய 'ஆனந்த விகடன்'களில்கூட புது யுகத்தின் புதுமை எழுத்துக்கள் பரவவேண்டிய நிலை! தமிழ் நடையிலே புது மாற்றம்! அந்நடை பழகுவோரையே மக்கள் விரும்புகின்றனர் — மதிக்கின்றனர் என்ற ஒரு புது நிலை எங்கும், தீவிரமாகப் பரவி வருகிறது. வகை வகையான நூல்கள், புதுப் புது பத்திரிகைகள், தமிழ்ப் பூஞ்சோலையில் பூத்துக் குலுங்கத் தலைப்பட்டு விட்டன! பகுத்தறிவு பேசியோரை பார்க்கக் கூசிய பண்டிதமணிகளும், 'பரமபதம் நோக்கி'களுங்கூட இன்று மறுமலர்ச்சியின் மாணாக்கர்களாகி வருகின்றனர்.

இத்தகைய புது நிலை—கோவையில் கடந்த மாதம் 27, 28 தேதிகளில் கூடிய முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் பெருமிதமாகக் காட்சியளித்தது.

தமிழ்க் காவலர்களான பண்டிதப் பெருமக்களும், தமிழைக் காக்கும் படைவீரர்களான பல்லாயிரக் கணக்கான இளங் காளைகளும், எண்ணற்ற வீராங்கனைகளும், எதிர்காலச் சிற்பிகளாகிய மாணவ மாணவிகளும் குழுமியிருந்தனர். கொங்கு நாட்டின் தொட்டில் — கோவை மாநகர், அந்த இரு நாட்களிலும் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கொழிக்கக் கொந்தளித்துக் கிடந்தது.

திராவிடத்தின் எழுச்சியை, இந்தப் புது மலர்ச்சி யுகத்தைச் சித்தரிக்கும் சிறப்பு அமைந்த இம் மாநாட்டினைக் கூட்டி, திட்டங்கள் தீட்டி, பெருமையின் பிம்பங்களாய் ஆகிவிட்டனர்—கோவைத் தோழர்கள். களைப்பும் கவலையும் தங்களைத் தாக்கினாலும் புன்சிரிப்புடன் அவைகளைத் தூரத் தள்ளிவிட்டு, இம் மாபெரும் பணியில் மனமொருமித்து நின்று,—தங்கட்கும் நாட்டிற்கும் தனியாக ஒரு சிறப்பைப் பெற்றுவிட்டனர் — கோவையின் வீர மணிகள்—வெற்றிக் காளைகள்!

ஏழைகள்—எனினும் கோழைகளல்ல! கோடீஸ்வரர் ஆதரவு கிடையாது—குப்பையில் பாடுபடுவோரின் கூட்டமே நாங்கள்! மேனாமினுக்கிகள், ஜரிகைத்துப்பட்டாக்கள், மாஜி மந்திரிகள் இல்லை—எனினும் மக்கள் இருக்கிறோம் என்று எடுத்துச் சொல்வதுபோல இருந்தது முத்தமிழ் வளர்ச்சி மாநாடு.

ஏழையின் கண்ணீர், பாட்டாளியின் பரதவிப்பு, உழைப்போனின் உள்ளத்துடிப்பு, மக்களின் மனநிலை கொண்டதே-கலைஎன்றார் லெனின்—புது மார்க்கத்தில் புகுந்துவெற்றி கண்ட வீரன்.

கலை—தனதனவான்களின் இங்கிதப்பேச்சிலிருப்பதல்ல, உல்லாச வேளைக்காக அல்ல, ஓய்வைக் கழிக்கப் பயன் படுவதற்காகவுமல்ல; மக்களுக்காக இருக்கவேண்டும், அவர்களின் வளைந்த வாழ்வை நிமிர்க்கப் பயன்படவேண்டும். கலை—நெருங்க முடியாத நெருப்பாக இருக்கக் கூடாது, கலைவளர் மதியம்போல இருக்கவேண்டும்! என்று எண்ணுவோரது இலட்சியம் நிறைவேறியது போலிருந்தது, முத்தமிழ் வளர்ச்சி மாநாடு.

முத்தமிழ் கற்றோர் கூடினர் — இயலும், இசையும், கூத்தும் அங்கு கொழித்துக் கிடந்தது!

கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாடு — கூடிக் கலைவோரால் கூட்டப்பட்டதல்ல! பட்டத்தையும், பதவியையும் பெற 'பத்தாயிரம்' செலவழித்து கூட்டுவோமா ஒரு மாநாடு —என்ற சூதுமதியுடன் கூட்டப்பட்டதல்ல! 'இப்போது எச்சரக்கு விற்பனையாகும்'என்று 'சீசன்சரக்கு' வியாபாரத்தில் கைதேர்ந்தோரல்ல குழுமியவரும், கூட்டினோரும்! தமிழ்! தமிழ்!! என்று தமிழ்பற்றிய விழிப்பு மக்கள் மனதிலே மலர்ந்திருக்கிறதே—அதை நமது 'சுயநலத் தோட்டத்துக்கு' எருவாக்கிக்கொள்வோமா, என்ற எண்ணத்தின் அடிப்படையிலே முகிழ்த்ததல்ல!

தடியடியும் துப்பாக்கியும் தாக்கினும் அஞ்சோம், அயரோம் என்ற வீரமுழக்கத்தை இப்பொன்னாட்டில் எழுப்பிய திராவிடரியக்கத்தார் கூடினர். 'சூழ்ச்சியின் உருவமே! சுயநலப் பிம்பமே! தூரநில்—நாங்கள் துள்ளிடும் வேல்!' என்று மார்பு தட்டும்.

மறவர்கள் கூட்டம் அது. 'உடல் தளர்ந்திடினும் உள்ளம் தளராத நான் உண்மைத் தமிழ் மகன்' என்று கூறி, 'படுத்த விளக்குறி மீசை துடிக்க, வாளெடு!' என்ற வெற்றி முரசம் அதிர்க்கும் பசுமலைத்தங்கம் பைந்தமிழ்ச் சுரங்கம் நாவலர் பாரதியாரும், இயலிசை கூத்து எனும் முத்தமிழையும் தனது தித்திக்கும் செங்கரும்புச் சாறெனும் தெள்ளமுதக் கவிதைகளில் வடித்துத்தரும் சிங்க நெஞ்சன், திராவிடத்தின் விழிப்பு பாரதிதாசனாரும், பசுந்தமிழ்ச் சோலையில் பழுத்த கனியென விளங்கும் ஔவை துரைசாமியாரும், வெள்ளையுள்ளமும் வீர முழக்கமும் அருந்தமிழ்ச் சேவையும் கொண்ட வெள்ளைவாரணனாரும், கற்கண்டெனும் நற்பெருங் கருத்துக்களை எடுத்து விளக்கும் பன்மொழிப் புலவர்—தமிழின் சின்னம், அயரா முயற்சி அப்பாதுரையாரும், இன்மொழிபேசி என்கடன் பணி செய்து கிடப்பதே என்ற இலட்சியமும் கொண்டு எந்நேரமும் தமிழ்த் தொண்டாற்றும் இராம. மீனாட்சிசுந்தரனாரும், சுந்தரச் சொல்லமுதம் தரும் சுந்தரராசனாரும், வெற்றிக் குரலெடுத்து, 'வீழ்ந்தாய் தோழா! வீணாகாதே, விழி!' என்று முழக்கமிடும் சுயமரியாதைச் சூரர் பொன்னம்பலனாரும், தனித்தமிழார்வமும் 'சண்முகத்தை'யும் 'சாமிநாதனை'யும் 'இளமுருகனாகவும்' 'செம்மல்

தங்கோ'வாகவும் தமிழகத்தில் உலவச் செய்த பெருமைபடைத்தவரும், வீர நெஞ்சருமான அண்ணல் தங்கோவும், ஆகிய புலவர் பெருமக்கள் அங்கு கூடியிருந்தனர்.

தேன்சுவையோ, தித்திக்கும் செங்கரும்புச் சாறோ அல்லது தெள்ளமுதமோ என்று திகைக்கும்வண்ணம் தமிழிசை பாடிடும் சிதம்பரம் ஜெயராம், திருவாரூர் நமசிவாயம், இராச மாணிக்கப் பாகவதர் ஆகிய இசைச் செல்வர்கள், அங்கு வந்து, முத்தமிழின்பால் தங்களுக்குள்ள காதலைக் காட்டிக்கொண்டனர்.

நகைச்சுவைமூலம் நாட்டில் நற்கருத்துக்களைப் பரப்பிப் பணிபுரியும் நகைச்சுவை யரசர் என். எஸ். கிருஷ்ணன் வில்லுப் பாட்டுமூலம், வள்ளுவர் வரலாறு எனும் விருந்து படைத்தார்.

உடுமலை நாராயண கவி அவர்களால், மாநாடு குறித்துத் தீட்டப்பட்டிருந்த வாழ்த்துக் கவிதையை நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி தமது வீணைக்குரலெடுத்து, மக்கள் மனம் உருகப் பாடி மகிழ்வித்தார்.

முத்தமிழ் மாநாட்டில் — இயல், இசை, நாடகம் என்னும் மூன்று துறையிலீடுபட்ட பல்வகையோரும் கூடியிருந்தனர். திரைப்பட நடிக மணிகள், திரைப்படத் தயாரிப்பாளர்கள், நாடகாசிரியர்கள், திரைப்படக் கதாசிரியர்கள், இசைவாணர்கள், எழுத்துச் சிற்பிகள், பத்திரிகாசிரியர்கள், கவிதைக் காளைகள் எல்லாரும் கலந்துகொண்டனர்.

புதுயுகக் கவிஞர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் கவிதைப் போட்டி ஒன்றையும் மாநாட்டினர் நடத்தினர். புரட்சிக் கவிஞரும், பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரும், 'அழகின் சிரிப்பு' என்ற தலைப்பில் வந்திருந்த கவிதைகளையெல்லாம் பரிசிலனை செய்து தோழர்கள் முடியரசு, வாணிதாசன், ஆகியோர் முதற் பரிசுக்கும், இரண்டாவது பரிசுக்கும் உரியவரென தீர்ப்பு வழங்கினர். இக்கவிதை யரங்கில் சற்றேறக்குறைய நாற்பதுக்கு மேற்பட்ட இளங்கவிஞர்கள் கலந்துகொண்டனர். இது, தமிழின் பெருமையைக்காக்கத் தயாராகும் நிலையை நன்கு காட்டுகிறது!

திராவிடரியக்கத்தின் மாணிக்க மணிகள், முன்னேடும் வீரர்கள் யாவரும் இரு நாட்களும் இதயம் பூரித்துக் கிடந்தனர் — இத்தகைய சிறப்புடன் மாநாடு நடைபெறுகிறதே, மக்களெல்லாம் மகிழ்ச்சித் திருநாளாகக் கூடிவிட்டனரே,

தமிழ் இனித் தழைக்கும்! தருக்கர் போக்கு இனி ஒழியும்! என்று சிந்தையெலாங் குளிர.

கோவை மாநாடு குறுகிய காலத்தில் கூட்டப்பெற்றது — எனினும் வீழ்ந்த சமுதாயத்தின் வெற்றிக் குரலாக அமைந்துவிட்டது.

தமிழ் வளர்க்க, வளரும் தமிழைக் காக்க, அதற்கான முயற்சிகளைச் செய்யக்கூடிய பல தீர்மானங்கள் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேறின. அவைகளில் முக்கியமானது, முத்தமிழ் பெருமன்றம் நிறுவுவதென முடிவு செய்யப்பட்டு, நிறுவப்பட்டதுதான்.

X X X

தென்னாட்டில் புதுயுகம் ஆரம்பமாகி இருக்கிறது! மொழியையும் நாட்டையும் காக்கும் படைவீரர்கள் தயாராகிக்கொண்டு இருக்கின்றனர். நாட்டில் ஒரு கட்சியினரிடம் என்றல்ல, எல்லாக் கட்சியினரிடையும், எங்கெங்கு தமிழ்மகன் இருக்கிறானே அங்கெல்லாம் 'தமிழ்' 'தமிழ்' என்ற முழக்கம் ஆரம்பமாகிவிட்டது.

இத்தகைய புதுநிலையில், நாட்டின் எதிர்காலத்தை எண்ணுவோருக்கு பூரிக்கவே செய்யும். இந்தப் புதுநிலை பொசுங்கிவிடாது—வளரத்தான் செய்யும்! எனினும், இப்போது அதற்கு ஏற்பட்டு வரும் தடைக்கற்களை, இடி மின்னல்களை எண்ணும்போது இதயம் துடிக்காமற் போகாது.

வாழ்ந்து வீழ்ந்தோர்—தட்டுத் தடுமாறி எழுந்து நிற்க முயற்சிக்கையில் அவர்கள் தலையில் சம்மட்டி அடி விழுகிறது —இந்த நாட்டுக்குத் தேவையில்லாத இந்தி எனும்மொழி மக்களிடையில் பலாத்காரமாகத் திணிக்கப்படுகிறது.

அந்நிய மொழியொன்றின் படையெடுப்பால் தாய் மொழி சிதைந்து கெட்டது போதும்! இனி, எதற்கும் பொறுக்க மாட்டோம். பொங்கிடும் எரிமலையாவோம் பொசுக்கிடுவோம் எமது மொழிக்கு வரும் எத்தகைய சூழ்ச்சியையும் என்று மார் தட்டித்தமிழ் இளைஞர்களின் 'புது சகாப்தம்' அரும்பிக்கொண்டிருக்கிற நேரத்தில, இன்னொரு புது மொழி—இந்தி — திணிக்கப்படுகிறது, வடநாட்டு ஆதிபத்தியத்தால், இன்னொரு கலாச்சார இனத்தால், ஆள வந்தார் அவர்களாகவே இருக்கும் காரணத்தால்.

கேட்டை எவரும் விரும்பி ஏற்க மாட்டார். சாவே, வா என்று எவரும் சாவுக்கு அஞ்சலியும் நடத்த மாட்டார். ஆகவே தமிழ்ச் சோலையில் மீண்டும் இந்தி புகுத்தப்படுகிறது—அதை எதிர்த்து நமது மொழியைக் காக்கவேண்டும், எதிரிகளிடமிருந்து, காப்பதோடுமட்டுமல்ல வளர்க்கவேண்டும், வகையோடு என்ற ஆசையின் விளைவாக முகிழ்த்திருப்பதுதான் முத்தமிழ்ப் பெருமன்றம்.

நாவலர் பாரதியார் மன்றத்தின் தலைவர், கவிஞர் பாரதிதாசன் மன்றத்தின் செயலாளர் எனின், அம்மன்றம் எத்தகைய பணிகளை ஆற்றும் என்பது உரைக்கவும் வேண்டுமோ! தமிழை வளர்த்துக் காக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு முத்தமிழ்ப் பெருமன்றம் நிறுவப்பட்டுவிட்டது. முத்தமிழோ— இன்று வீழ்ச்சியடைந்த நிலைமாறி எழுச்சிபெற்றுக்கொண்டிருக்கிறது.

'இராவண காவியம்' போன்ற காவிய நூல்களும், பற்பல புதுப் புது அறிவியல் நூல்களும் அரும்பிக்கொண்டிருக்கின்றன — இயல் துறையில்.

தமிழிசைக் கிளர்ச்சி எழுப்பி, தகாக்கருத்துக்களைப் பாடிப் பகுத்தறிவை பாழாக்கக்கூடாது என்று முரசொலிக்கும் புதுநிலை வேகமாக வளர்கிறது—இசைத்துறையில.

புராண நாடகங்கள் போய் சமுக சீர்திருத்த நாடகங்களும், பகுத்தறிவை பரப்பும் புதுபுது நாடகங்களும் தினசரி பூத்துக்கொண்டே இருக்கின்றன.

முத்தமிழ் இன்று வளரத் தலைப்பட்டு விட்டது. ஆனல், வளர்ச்சியைத் தடுக்க வல்லமை கொண்ட

(10-ம் பக்கம் பார்க்க)

# சூழல்—
# —விளக்கு

## பத்து இலட்சங்கள்!

மராமத்து மந்திரி வந்திருந்தார்—இடத்தைப் பார்வையிட்டார், எப்படி எப்படி வசதிகள் செய்யவேண்டும் என்று ஆலோசனை செய்தார்—பலருடன் விவாதித்தார் — நீண்ட நேரம் கழித்து யோசனைகள் சொன்னார். கூடியிருந்தோர் இவைகளைச் செய்ய, 'பத்து இலட்ச ரூபாய்' திரட்டப்படவேண்டும் என்றனர். 'இதென்ன சாதாரணமா, வேண்டியதுதான் அவ்வளவு தொகை. மகத்தான பணிக்கு இந்தாருங்கள் என் காணிக்கை' என்று ரூ 1500ஐ எடுத்துக் கொடுத்தார். கருணைவள்ளல், காருண்ய பிதா, யாரிவர் — என்று கேட்கிறீர்களா! வேறு யாருமல்ல, இந்திய சர்க்காரின் மராமத்து சுரங்க இலாகா மந்திரி என். வி. காட்கில தான்! இவ்வளவும் எதற்குத் தெரியுமோ—அடுத்த மாதம் நாசிக் நகரில் நடைபெறப்போகிறதல்லவா இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு, அதற்குத்தான்! இம்மாநாட்டிற்கான எல்லாவித வசதிகளையும் இந்திய சர்க்கார் செய்து தருமாம். கட்சி மாநாட்டிற்கு, சர்க்காரின் பொதுப் பணம் கரியாகும் வகையில் வசதிகள்! அடிக்கிறது யோகம் காங்கிரசுக்கு — மங்களமிழந்த 'மாமி'க்கு குங்குமம் தரப்படுவதுபோல! விதவைக்குக் குங்குமம், வீணைசை; எனினும் விட்டபாடில்லை. ஆட்சி கையிலிருப்பதால் ஆசைபோனபடி நடக்கின்றனர்!

## ஆசைவிடுமா?

தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் தேர்தல் குறித்து, 'பரபரப்பான' செய்திகள் கிளம்பிவிட்டன — எப்போதும்போல செய்திகள் நீர்க்குமிழியாக இருக்காதாம்—நிச்சயம் காமராஜருக்குப் போட்டி இருக்குமாம். தோழர்கள்: ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார், அண்ணாமலைப் பிள்ளை, கோவை-சுப்பையா ஆகியோர் பெயர்கள் அடிபடுகின்றனவாம்—'ஊர்க்குருவி'யொன்று உரைக்கிறது! எது எப்படியிருந்தாலும் அசைக்கமுடியுமா காமராஜரை, அவரது யோகம் எப்போதும் மங்களமாகவே இருக்கும் என்கிறான் ஆபீஸ் பையன். பரிதாபம், அவனுக்கென்ன தெரியமுடியும், அரசியல் சூதாட்டத்தைப்பற்றி!

## ஐயோ, பரிதாபம்!

பத்து இலட்சம் ஒரு மாநாட்டுக்கென செலவிட முடிவுசெய்திருக்கின்றனர், மத்திய சர்க்கார் மந்திரியும், காங்கிரஸ் கட்சியாளரும். கூடிக்கலைய பத்து இலட்சங்கள்! பணம் உருண்டோடப்போகிறது அங்கு தண்ணீர்போல! அதே செய்தியைக் கேள்விப்படும் வேளையில் கிடைக்கும் இரு செய்திகள்:

> திருவொற்றியூர்,- கஞ்சிக்கு வழியில்லை, காலணா சம்பாதிக்கவும் வகையில்லை என்ற காரணத்தால், வறுமையின் கொடுமை தாங்காது, கணவனும் மனைவியும் தற்கொலை செய்துகொண்டனர்
>
> காசி:- குழந்தைகளை முதலில் கங்கையில தள்ளிவிட்டுப் பின்னர் தன் ஆசை மனைவியைத் தள்ளிவிட்டுத், தானும் தண்ணீரில் குதித்தான். சோற்றுக்கு வழியில்லாது, பல நாட்கள் பட்டினியாகக் கிடந்து, துடிப்பு தாங்காது, வேறு வழியில்லையென்று துணிந்தே இம்முடிவுக்கு அந்தப் பேர்வழி வந்தாராம்.

நெஞ்சைக் கொதிக்கச் செய்யும் வேதனை நிகழ்ச்சிகள்; நாடெங்கும்! படுக்கவும் தங்கவும் இடமிலலாது தெருவோரங்களில் துடித்துக் கிடக்கிறார்கள் நாயைப்போல மக்கள். ஆனால், நாடாளவந்தவரோ, மாநாட்டுக்குப் பத்து இலட்சமும், காந்தி ஸ்தூபிக்கு ஐந்து இலட்சமும் திரட்டுகின்றனர்! விசித்திரமான நடவடிக்கைகள்—எனினும் விரிந்து கொண்டிருக்கிறது 'ஏழைபங்காளர்' ஆட்சியில்!

## விசித்திரமல்ல, வேதனை!

'கட்நெக்' ரவிக்கை போடாதே; கணவனுடன் கைகோர்த்து நடக்காதே! என்று யாராவது சொன்னால், 'யாரப்பா அந்த ஆள்' என்று கோபத்தோடு கேட்பார்கள். பெண்கள்மட்டுமல்ல, ஆண்களும் கூட! ஆனால், இப்படித் தடையுத்தரவு பிறப்பித்து, சட்டங்கொண்டு வருகிறது ஒரு அரசாங்கம்! இது என்ன பித்துக்குள்ளித்தனமாக இருக்கிறதே, நிமிடங்கள் உலகின் மறுமலர்ச்சித் தோட்டத்திற்கு புதுமலர்களாக மாறிக்கொண்டிருக்கும்நேரத்தில் — என்று கேட்கத் தோன்றும். அரேபிய சர்க்கார், அண்மையில் ஒரு மசோதாவைப் பிரசுரம் செய்துள்ளது. முஸ்லீம் பெண்கள் குறைவானவையும் தணிந்த கழுத்தும் உள்ள ஜாக்கெட்டுகளை அணியக்கூடாது; 'பார்க்' 'ரோடு'போன்ற பொது இடங்களில் தங்கள் கணவன்மார்களுடன் கைகோர்த்துக் கொண்டு போகக்கூடாது-இதுதான் இந்த மசோதாவின் முக்கிய அம்சம். முன்னேற்றம் எங்கும் முகிழ்த்துக் கொண்டிருக்கும் நேரத்தில் பெண்களை பேசாமடந்தையாக்குந்திட்டம் தீட்டுகிறது, அரேபிய அரசாங்கம்! மூடநம்பிக்கையின் வெறி அவ்வளவு தூரம் ஆட்சிபுரிகிறது, அங்கு!

## வெறிப் பாதை

'மஜ்தூர்'—என்னவென்றதிகைக்காதீர்கள். 'கூலியாள்' என்று கூப்பிடுகிறீர்களே அது இனி கூடாது என்று இந்தப் புது 'மகுடத்தை'ச் சூட்டுகின்றனர், இந்திய அரசாங்கத்தார். எல்லாத் தொழிலாலைகளும் இனி இந்தப் பெயராலேயே தங்கள் ஆலைகளில் பணியாற்றுவோரை அழைக்கவேண்டுமாம்! வெகுசுகமாக கினைத்ததையெல்லாம் பெற்று வாழ்கிறார்களல்லவா தொழிலாளர்கள்—எனவே 'கூலிகள்'என்ற 'மரியாதை'ச் சொல்லை எடுத்துவிட்டு, 'மஜ்தூர்' என்ற மகுடத்தைச் சூட்டுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

# மொழி வளர வழி

இலக்கணம் என்பதற்கு நேராக வடமொழியில் லட்சணம் என்ற சொல்லும் இலக்கியம் என்பதற்கு நேராக லட்சியம் என்ற சொல்லும் வழங்குகின்றன. ஆனால், இலக்கணம் என்று தமிழில் வழங்கும் சொல்லால் குறிக்கப்படும் பொருள் வேறு, அதற்கு நேரான வடசொல் குறிக்கும் வடமொழிப் பொருள் வேறு. அவ்வாறே இலக்கியம் எனத் தமிழில் வழங்கும் சொல் குறிக்கும் பொருள் வேறு, அதற்கு நேரான லட்சியம் என்ற வடசொல் குறிக்கும் வடமொழிப் பொருள் வேறு. இலக்கணம் என்ற சொல்லால் தமிழில் குறிக்கப்படும் எழுத்து, சொல் முதலியவற்றை வடமொழியில் வியாகரணம், சப்தம் என்று வழங்குவர். இப்படியே இலக்கியம் என்ற தமிழ்ச் சொல்லால் குறிக்கப்படும் உரையும் பாட்டுமாகிய செய்யுளை வடநூலார் சாகித்தியம் என வழங்குவரே தவிர, லட்சியம் என்று வழங்குவதே கிடையாது, இதனால் தமிழில் வழங்கும் இலக்கியம், இலக்கணம் என்ற சொற்கள் வடசொற்கள் அல்ல என்பதைத் திட்டவட்டமாகக் கூறிவிடலாம்.

இலக்கணம் என்ற சொல் தொல்காப்பியர் காலமுதலே தமிழில் வழங்கும் தொன்மை வாய்ந்தது. "இலக்கண மருங்கிற் போற்றல் வேண்டும்" "இலக்கண மருங்கிற் சொல்லாறல்ல" என்பன முதலிய தொல்காப்பிய சூத்திரங்களால், இச் சொல் வழக்கின் தொன்மை நன்றாக விளங்கிவிடும். இனி இலக்கணம், இலக்கியம் என்ற சொற்களை தமிழ்ச் சொற்களோடு வைத்து நோக்குமிடத்து இவை தமிழ்ச் சொற்களே என அறுதியிட்டுரைப்பதற்கு ஆகாத இயல்புடையவாயிருக்கின்றன. சொல்வரலாறு (History of words)மொழில்நூல் ஒப்பியல்(Comparative Philology) முதலிய நெறிகளில் வைத்து உண்மை காண வேண்டியனவாம் ஆகவே, தமிழில் வழங்கும் இலக்கியம் இலக்கணம் என்ற சொற்கள் வடசொற்கள் அல்ல என்பது உறுதி. ஆனால் அவை தமிழ்ச்சொற்கள் தாமா என்பதும் ஆராயவேண்டிய ஒன்றென்பது தெளிவாக மனங்கொள்ள வேண்டுவ தொன்றாகும். இவ்வகையில், இவ்வாராய்ச்சி முடிந்தமுடிபன்று என்பதும் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழைப்பற்றிப் பேசும்போதெல்லாம் "தமிழ் அகத்தியமுனிவரால் காணப்பட்டது, வளர்க்கப்பட்டது" என்றும் வடமொழியைப் பாணினிக்கும் தமிழ் மொழியை அகத்தியர்க்கும் ஆண்டவன் அறிவுறுத்தினான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. ஆனால் அப்புராணங்களே அகத்தியமுனிவர்

> கோவை முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலே சிந்தியவை

தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்பே தமிழ்நாட்டில் தமிழ்மொழியில திருந்திய இலக்கணமும் பொருந்திய இலக்கியங்களும் நிறைந்திருந்தன என்றும் மக்களும் அவற்றைப் பயின்று கூர்த்த மதியுடையவர்களாய் இருந்தனரென்றும் கூறுகின்றன. இறைவனுக்குத் திருமணம் நடந்த காலையில் முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் கின்னரரும் கிம்புருடரும் பிறருமாக ஏறக்குறைய நாற்பதுகோடி மக்கள் கூடினார்களாம். அவர் சுமை தாங்கமாட்டாத மேருமலை அழுந்தத் தொடங்கிற்றாம். அதுகண்டு அஞ்சிய அக்கூட்டம் இறைவன்பால் முறையிட அவர் அகத்தியரை வருவித்து 'நீ தென்னாடு சென்று பொதியமலையில் இருப்பாயாக. அப்படியிருப்பின் சுமை சமமாய்விடும். இக்கூட்டம் புதைந்து ஒழிய வேண்டிய நிலை வாராது" என்று தெரிவித்தாராம். அந்த ஆணை கேட்ட அகத்தியர் "நான் செல்லும் தேசம் தமிழ்நாடு என்று பெரியோர்களாற் கூறப்படும். அங்கு வாழ்கின்ற மக்கள் தமிழ் நூல்களை ஆராய்ந்து கூரிய மதிநுட்பம் உடையவர்கள் என்று சான்றோர் கூறுவர். அவர்கள் கேட்கும் வினாக்கட்கு விடை யளிக்கக்கூடிய தமிழ்அறிவு எனக்குக் கிடையாது. அதை அருளல் வேண்டும்" என்பாராய்,

"விடைகோடு போவான் ஒன்றை
வேண்டினான் ஏதும் தேயம்
தோடைபெறு தமிழ்நா டென்று
சொல்லுப அந்த நாட்டின்
இடையயில் மனித்த ரெல்லாம்
இன்தமிழ் ஆய்ந்து கேள்வி
உடையவர் என்ப கேட்டார்க்கு
உத்தரம் உரைத்தல் வேண்டும்"

என்று வேண்டிக்கொண்டாரென்று பரஞ்சோதிமுனிவர் தமது திருவிளையாடற்புராணத்திலே எடுத்துரைக்கின்றார். எனவே தமிழ்நாட்டில் நிலவும் தமிழ்மக்களது முத்தமிழ், அகத்தியமுனிவர் தமிழ்நாட்டிற்கு வருவதற்கு முன்பே (பௌராணிகமுறைப்படி) பல்லாயிரமாண்டுகட்கு முன் நிலவியதொரு பழமையான மொழி என்பது தெளிவாக உணர வேண்டுவதாம்.

இம்முத்தமிழும் சங்க காலத்தில் வாழ்ந்த வேந்தர்களாலும் செல்வர்களாலும் பெரிதும் ஆதரித்து வளர்க்கப்பெற்றது. புலவர்களை ஆதரிக்குமுகத்தான் இயற்றமிழையும், பாணர்களை ஆதரித்து இசைத்தமிழையும், கூத்தர்களை யூக்கி நாடகத் தமிழையும் வளர்த்து வந்தார்கள் என்பதைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. இந்த ஆதரவின் பயனாக

வானத்தில் நிலவும் விண்மீன்களும் திங்கள் முதலிய கோள்களும் ஞாயிற்றின் ஈர்ப்பாற்றலில் ("ஞாயிற்றின் பரிப்பு"—புறம்) இயங்குகின்றன. என்ற உண்மையையும் கடலிற் செல்லும் கலங்களை இயக்கும் வணிகக் காற்றின் இயல்பை (Trade Winds) யவன நாட்டின் ஹிபலாஸ் என்பவன் கண்டு பிடிப்பதற்கு முன்பே, நம் தமிழ் முன்னோர்கள் கண்டுபிடித்தார்கள் என்றும் சங்க இலக்கியங்களே கூறுகின்றன.

இவ்வண்ணமே இன்று நிலவும் விஞ்ஞான உண்மைகள் பல சங்க காலத் தமிழ்ச் சான்றோர்களால் அவர்கள் பாடிய பாட்டுக்களிடையே குறித்துக் காட்டப்படுகின்றன. தமிழருடைய அரசியல், சமயம், சமுதாயம், முதலிய துறைகளில் தமிழ் உயர்ந்த நிலையில் நின்று விளங்கியதின் பயனாக புலவர்களது ஆராய்ச்சி இவ்வுண்மைகளை ஆராய்ந்து காண்பதில் முற்பட்டு நின்றது என்பதை நினைவுகொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்களது வாழ்வு முழுவதும் பரந்து நின்று சிறந்த பணியாற்றிய முத்தமிழ் பின்வந்த களப்பிரர்களால் சீரழிந்தது. பல்லவர்களும் இடைக்காலச் சோழ பாண்டியர்களும் விஜயநகர வேந்தர்களும் அவர்கட்குப் பின்வந்த மேனாட்டவர்களும் வடமொழிக்கும் தமிழல்லாத பிறமொழிகட்கும் அளவிறந்த சலுகை செய்தனர். வடமொழிப் பயிற்சிக்கும் ஏனைமொழிப் பயிற்சிக்கும் தமிழ் நாட்டரசியலும் சமயமும் பேராதரவு தந்தன. அதனால் தமிழர் தமிழுணர்வு குன்றினர். முத்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரம் போன்ற சீரிய காவியங்கள் தோன்றுதற்கு இடமில்லையாயின. இசை நூல்களும் நாடக நூல்களும் இறந்துபோயின. அன்று வீழ்ந்த தமிழன் இன்றும் எழவில்லை. அந்நாளில் இடைமுறிந்து வீழ்ந்த இன்பத் தமிழ் இன்றுகாறும் தன் துன்பச் சூழலினின்றும் விடுதலை பெறவில்லை.

வீழ்ந்த தமிழனை எடுத்தற்கும் வீழ்ந்த தமிழ்மொழியை மேம்படுத்தற்கும் இன்னும் நல்ல முயற்சி செய்யப்படவில்லை. இப்போது மொழி பயலும் இடங்களாய அரசியல் நிலையம், சமய நிலையம், கல்வி நிலையம் ஆகிய இந்நிலயங்களில் தமிழ் தனது உரிமை இடத்தைப் பெறவில்லை. அது பெறுமாறு செய்தற்குரிய முயற்சி நன்கு தோன்றவில்லை. அரசியல், சமயம் முதலிய நிலையங்களில் தமிழ் தனக்குரிய இடத்தைப் பெறுவிக்க வேண்டுமானால் கல்வி நிலையங்களில் அது தனக்குரிய முதலிடத்தைப் பெறவேண்டும். கல்வி நிலையங்களில் முத்திற மொழிகள் சிறுவர்கட்கு கற்பிக்க வேண்டுமென ஓர் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. "அகில உலகத் தொடர்புகட்கு ஆங்கிலம் அவசியம். ஆகவே அது கட்டாயம். இந்திய மொழி அவசியம், ஆகவே இந்தி கட்டாயம்; ஆனால் தமிழை ஒருவன் படித்தாலும் படிக்கலாம் படிக்காது விட்டுவிட்டாலும் விடலாம். அது அவ்வளவு அவசியமில்லை." என்ற கருத்து இப்போதைய கல்வியமைச்சர் முதலிய கல்வியாளர் மனதில் நிலவுகிறது.

சில தமிழ்ப் பத்திரிகையாசிரியர்கள் தமிழ் மக்களை நல்லதன் நன்மையும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணரும் பகுத்தறிவு இல்லாத மாக்கள் எனக் கருதுகின்றனர். இந்தியும் ஆங்கிலமும விளக்கெண்ணெய் போன்றவை என்னும் குழந்தைகட்கு விளக்கெண்ணெயைத் தாய்மார் கட்டாயப்படுத்தித் தருவது போல இந்தியும் ஆங்கிலமும் கட்டாயப்படுத்தித் தருவதுபோல இந்தியும் ஆங்கிலமும் கட்டாயப் படுத்தப்பட வேண்டுமென்றும், தமிழ் சர்க்கரைக் கட்டி போன்றதென்றும், அதைச் சிறுவர்கள் தாமாகவே விரும்பி யுண்பார்களாகையால் கட்டாயப்படுத்த வேண்டியதில்லை என்றும் விளக்கெண்ணெய் வாதம் செய்கின்றனர். சர்க்கரைக்கட்டி அதிகப்பட்டால உடற்கு நோய்செய்தல்போல தமிழ் முதலிய தாய்மொழியறிவு அதிகப் பட்டால் நாட்டுமக்கட்கு கேடு உண்டாகும் என்பது இந்த பத்திரிகை ஆசிரியர்களுடைய கருத்தென்று தெரிகின்றது. பொருள்களின் உண்மையை அறிவதற்கு கண் கருவியாய்ப் பயன்படுவதுபோல அறிவுப் பொருட்களை அறிந்து கொள்ளுவதற்கு மொழி கருவியாக இருக்கிறதென்பதை இந்தப் பத்திரிகைக்காரர்கள் உணரவேண்டும். நுட்பமுடைமையால் எளிதில காண முடியாத பொருள்களைக் கண்டறிவதற்கு தக்க கண்ணாடிகள் கண்ணுக்குக் கருவியாய்ப் பயன்படுவதுபோல, ஆங்கில முதலிய வேற்றுமொழிகளால் எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத கலைப்பொருட்களை விளங்கிக் கொள்வதற்கு தமிழ்மொழி உரிய கருவியாக இருக்கிறது. கண்ணாடியின் திட்பநுட்பத்திற் கேற்ப பொருள்விளக்கம் சிறந்து காணப் படுவதுபோல தாய்மொழிப்பயிற்சியின் நன்மை வன்மைகட் கேற்ப கலைபொருள் அறிவு நன்கு பெறப் படும். ஏனைப் பாடங்களைத் தமிழில் படிப்பதால் தமிழ் வளர்ந்துவிடு மென்பது அவர்களுடைய குருட்டு நம்பிக்கைகளுள் ஒன்று. கண்ணாடியை அணிந்துகொண்டு பொருளைக் காணும் ஒருவனுக்குக் காணக் காண அக்கண்ணாடி திட்ப நுட்பம் பெருகும் என்று சொல்ல முடியுமா? அப்பரப் பெருகும் என்று ஒருவன் சொல்லுவானானால் அவனுடைய உரை அறிவுடைய உரையாகுமா? எப்படி அது பொய்யென்று புறக்கணிக்கப்படுமோ, அப்படித்தான் மற்ற பாடங்களைத் தமிழில் படிப்பதால தமிழறிவு பெருகுமென்ற இவர்களுடைய உரை புறக்கணிக்கத் தக்கதாக இருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டித் தமிழ்மக்கட்கு உயர்ந்த கண்போல் விளங்கும் தமிழ்மொழியை "படித்தாலும் படிக்கலாம்" "படிக்காது போயினும் போகலாம" என்ற கருத்தால் அலட்சியம் செய்து அது வாயிலாக மக்களைக் குருடராகச் செய்யும் இத்திட்டத்தை மாற்றியமைக்க முயல வேண்டுவது தமிழ்மக்களது முதற் கடமையாகிறது.

இறுதியாக ஒன்று. ஒரு பொருளினது மதிப்பை உயர்த்துவதாலும் தாழ்த்துவதாலும் மக்களுக்கு அதனிடத்தே விருப்புவெறுப்புக்களை உண்டுபண்ணுவது முறை. மில் துணிகளைக் கிடைப்பதற்கு அரிதாக்கி மதிப்பை உயர்த்திய காலத்தில அத்தத் துணிகட்காக நாட்டுமக்கள் நாள்தோறும் போட்டியிட்டுக் கொண்டிருந்ததை நாம் கண்டிருக்கிறோம். பிறகு அவைகளை எங்கும் பெறத்தக்க அளவில் மதிப்பைக் குறைத்தவுடனே அவைகளை வாங்குவோர் குறைந்தேபோயினர். இந்த நுட்பத்தை மனதில் கொண்டு இன்றைய உலகில் அரசி

(7-ம் பக்கம் பார்க்க)

# வானொலியின் 'வக்கிரப்' புத்தி

## "காண்டீபம்" கண்டனம்!

அனைத்திந்திய வானொலி நிலையத்தின் போக்கு குறித்து நாட்டு நலனில் அக்கறை கொண்டோரால் அப்போதைக்கப்போது வெளியிடப்பட்ட அதிருப்திக் குறிப்புகளை நமது இதழில், எடுத்துப் பிரசுரித்து வந்துள்ளோம் — அந்த எண்ணங்களை நமது இதயத்திலும் இருப்பவை என்ற காரணத்தால்.

மக்கள் நலன் கருதி, அறிவொளி பரப்பி, பொது நோக்கோடு பணியாற்ற வேண்டிய வானொலி—இன்று ஆட்சியாளரின் குரலொலியாக மாறி வருகிறது—தமிழ் நாட்டின் மேம்பாட்டைத் தடைசெய்யும் சாவொலியாகத் தன் போக்கை மாற்றிக் கொண்டு வருகிறது.

'ஜேய் ஹிந்து'ம், 'இந்தி வகுப்பு'களும் இடம் பெற்றிருக்குமளவு தேன் தமிழின் செவ்வாழ்வுக்கான முயற்சிகள் அங்கு முகிழ்க்கவில்லை. வடநாட்டு ஆதிபத்தியததின் கோரவாடையிலிருந்து எழும்பும் வேதனை ஒலிகளை 'அஞ்சல்' செய்து, அவர்களுக்கு அஞ்சலி செய்து கிடப்பதே 'வாழ்க்கையின் கடமை' என்ற எண்ணத்திற்கு அடிமையாகி வருகின்றனர்—சுதந்திரமாகப் பணியாற்றும் பொறுப்பும் வசதியுங் கொண்ட வானொலி நிலையத்தினர்.

வானொலியின் வக்கிர புத்தி குறித்து நாம் கூறினால், பலருக்கு 'இவர்கள் கட்சிப் பிரச்சாரம் நடைபெறவில்லையென்று காய்கின்றனர்' என்ற கடுஞ்சொல்லை வீசுவர். 'பொன்னி' போன்ற நமது இதழ்கள் கண்டனக் குரல் எழுப்பினும் இதே காரணத்தால் வாயடக்க நினைப்பர். ஆனால், அதிருப்தி, நாட்டின் முற்போக்குக்குப் பாடுபடும் நமது உள்ளத்தில மட்டுமல்ல, தமிழ்ப் பற்று மிக்க திருச்சி தோழர் கே. ஏ. பி. விசுவநாதம் போன்றோரது இதயங்களிலும் அனல் வீசிக்கொண்டிருக்கிறது. இப்போது அந்த அதிருப்தி, தேசிய ஏடும், ஆளவந்தாரின் ஆசிர்வாதம் பெற்றதுமான "காண்டீபம்" வார இதழில கொநதளித்துக் கிளம்பியிருக்கிறது. அது, இது:—

"ஸ்ரீ ஆர். கே. சண்முகம் செட்டியார் சென்னை சர்க்காரின் கல்வி இலாகா உத்தரவை எடுத்து வைத்துக்கொண்டு அலசியது நன்றாக இருந்தது. பிரதேச பாஷையில் எல்லாப் பாடங்களையும் படிக்கலாமென்று கூறி, அதே மூச்சில் அப்பாஷையின் முக்கியத்தைக் குறைத்திருக்கும் சென்னை சர்க்காரின் முடிவு எவ்வளவு முட்டாள்தனமானதென்பதை ஸ்ரீமான்கள் சண்முகமும் அவினாசிலிங்கமும் அழகாக எடுத்துரைத்தார்கள். பாஷைப் பிரச்னை வரும்போது, அதுவும் விவாதமாக இருக்கும்போது கோபமும் ஆக்ரோஷமும் ஏற்படுவது சகஜம். ஆனால் இவ்விருவரும் கோப தாபங்கள் இல்லாது பேசி தீர்மானத்தைக் கச்சிதமாக முடித்துவிட்டனர்."

காண்டீபத்தார் குறிப்பிடும் தீர்மானம், சென்னை சர்க்கார் பிரதேச மொழிப் போதனை குறித்து அண்மையில் பிறப்பித்திருக்கும் உத்தரவை மாற்றவேண்டும் என்பதுதான். இத்தீர்மானத்தை, கோவை தமிழ் வளர்ச்சி மாநாட்டின் நிகழ்ச்சிகளை (முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டின் நிகழ்ச்சிகளையல்ல! அவ்வளவு பெருந்தன்மை ஏற்படுமா, வானொலி நிலையத்துக்கு! ஆட்சியாளரின் ஆதரவோடு, பணம் பெருத்தார்களின் பக்கபலத்தோடு நமது மாநாட்டுக்கு முதல் வாரம் நடைபெற்றதே அந்த மாநாட்டின் நிகழ்ச்சிகளை) ஒலி பரப்பிய வானொலி நிலையத்தார், ஒலி பரப்பாமல் நிறுத்திவிட்டனர். அது குறித்தே 'காண்டீபம்' எழுதுகிறது —தொடர்ந்து,

"ஆல் இந்தியா ரேடியோ பல விஷயங்களில் பிரிட்டனையும் அமெரிக்காவையும் காப்பி அடிக்கிறது. ஆனால் சில நல்ல விஷயங்களில் என்னவோ அசல் "ஆல் இந்தியா"வாகவே இருக்கிறது. பி. பி. ஸி. ரேடியோவில் எல்லாக் கட்சியினருக்கும் இடம் தருகிறார்கள். சர்ச்சைக்குள்ளான விஷயங்களை எல்லாம் எடுத்து ஒலி பரப்புகிறார்கள். சர்ச்சிலும் ஆட்லியும் தேர்தல் போட்டி பற்றி ரேடியோவிலேயே வெளுத்து வாங்குகிறார்கள். இதனாலெல்லாம் ஒரு கட்சி வலுத்துவிடும் என்றோ, இன்னொரு கட்சி படுத்துவிடுமென்றோ பயப்படுவதில்லை. அல்லது சர்க்கார் நோக்கமும் கொள்கையும் பாழாகிவிடுமென நடுங்குவதில்லை. இதுமாதிரி தான் அமெரிக்க ரேடியோக் கம்பெனிகளும் நடக்கின்றன. எந்தக் கருத்துக்கும் "இரும்புத் திரை" போடுவதில்லை. ஆனால் இந்த "ஆல் இந்தியா ரேடியோ"வோ ஒரு தீர்மானத்தைப் படிக்கவே இப்படிப் பயப்படுகிறது. பிரிட்டிஷ் ரேடியோவை பல வழிகளில் பின்பற்றும் இந்த ஸ்தாபனம், இவ்விஷயத்தில் மட்டும் கூச்சப்படுவதற்கு நியாயமான காரணம் ஏதாவது இருப்பதாகத் தெரியவில்லை மேலும் இததீர்மானம் அப்படி ஒன்றும் கோல் வால்கர் பாணியிலோ, மனோதேவ்கள் மாடலிலோ, ராமசாமி நாயக்கர் முத்திரையிலோ இருக்கவில்லை. ரொம்பவும் நிதானமான வார்த்தைகளில் தீர்மானத்தைத் தயாரித்து, அதே நிதானத்தில் பேசியிருக்கிறார்கள். அதோடு பேசியவர்களும் சாதாரணமானவர்களல்ல, பிரபலமானவர்கள். தூஷணையாகவும் துவேஷத்தைக் கற்பிக்கும்படியாகவும் ஒரு வார்த்தைகூட இல்லை. அப்படியிருந்தும் ஏன் இந்த "இரும்புத் திரை" வேலை என்பது புதிராக இருக்கிறது. இந்தத் தவறை மேலிடத்து அதிகாரிகள்தான் நீக்கமுடியும். அவர்கள் இதைக் குறித்து யோசிக்கவேண்டும். இப்படிச் செய்யாதிருந்தால் வீணாக உள்நாட்டிலாகாவுக்குத்தான் கெட்ட பெயர் வரும். "தொட்டாச் சுருங்கி" என்னும் செடியைவிட மோசமாக மனிதர்கள் இருக்கக்கூடாதல்லவா? அதைவிட மோசமாக சர்க்கார் இருக்கக்கூடாதல்லவா?"

*

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.